




# தினப்புயல்

PIN news THINAPPUYAL තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -338



## இனப்படுகொலை விவகாரத்தில் ஐ.நாவில் சிக்கப்போகும் இலங்கை அரசு

## வெள்ளை வான் -கறுப்பு வான் கடத்தல்களின் பின்னால் உள்ள மர்மங்கள் - நிராஜ் டேவிட்

## 2040 ஆம் ஆண்டளவில் இலங்கை அமெரிக்காவின் காலனித்துவ நாடாக மாற்றம் பெறலாம்

# இனப்படுகொலை விவகாரத்தில் ஐ.நாவில் சிக்கப்போகும் இலங்கை அரசு



இலங்கை விவகாரம் தொடர்பாக சனல் 4 தொலைக்காட்சி அக்கறை காட்டுவது ஏன் என்று கடந்த வாரம் எமது தினப்புயல் பத்திரிகையில் செய்திகள் வெளியாகியிருந்தது. வியாபார நோக்கம் அல்லது தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கம் என லாம். காரணம் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியிலிருந்து சனல் 4 ஊடகம் இலங்கை விவகாரம் தொடர்பாக அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறது.

கையடக்கத் தொலைபேசிகளுடாக இராணுவத்தினரிடமிருந்து பெறப்பட்ட புகைப்படங்களையே சனல் 4 ஊடகமானது இலங்கையரசிற்கெதிரான போர்க்குற்ற ஆவணப்படங்களாக தயாரித்து வெளியிட்டுள்ளது. மேலும் தம்மிடமுள்ள ஆவணப்படங்களினை வெளியிடுவதற்கு தயாராகவுள்ளது. இத்தொலைக்காட்சியானது புலனாய்வு நடவடிக்கைகளை இலங்கை நாட்டில் முடக்கிவிட்டுள்ளது. அது எவ்வாறெனில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும், ஊடகவியலாளர்களுடாகவும், இலங்கையின் முன்னணி ஊடகங்களில் பணிபுரிபவர்களுடாகவும் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. இராணுவத் தலைமைக் காரியாலயங்களில் பணிபுரியும் உயர் அதிகாரிகளினுடாகவும், அவர்களின் வெளிநாடுகளில் வாழும் உறவினர்களுடாகவும் இரகசியமான ஆவணப்படங்கள்சனல்4தொலைக்காட்சிக்கு ஆதாரங்களாக கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆதாரங்கள் மூலமாக பிரச்சினைகளுக்குப் தீர்வு காணுவதை விடுத்து இலங்கை அரசின் ஆதரவாளர்கள் எங்கள் ஊடகப் பணிகளின் மீது தொடர்ச்சியாகப் பகைமையோடு தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் என்று சனல் 4 ஆவணப் படத்தின் தயாரிப்பாளர் கெலும் மக்ரே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரின் இறுதிக் கால கட்டத்தில் இடம்பெற்றதான போர்க்குற்றங்கள் தொடர்பான தமது ஆவணப்படங்கள் குறித்து கெலும் மக்ரே எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத் தொகுப்புகள் மிக வெறுப்பூட்டுபவையாக இருக்கின்றன. பெண் போராளிகளின் உடல்கள் தொடர்பாகப் படையினர் நடந்து கொண்டுள்ள முறைகள், ஒரு முறை சார்ந்த மிருகத்தனமான கலாசாரம் மற்றும் பால்நிலை வன்செயல்களை அவை எடுத்துக்காட்டுகின்றன.

இந்தப் படங்களைக் கைத் தொலைபேசியில் ஒரு சிப்பாய் எடுத்திருக்கிறார். அதில் சிங்களம் பேசும் படையினர் காணப்படுகிறார்கள். அவர்களின்உடைகள்ஒருவிசேட அணியைச் சேர்ந்தவர்களாகக் காட்டுகின்றன. அவர்கள் சிரிக்கிறார்கள், ஊக்கப்படுத்திக் கொள்கிறார்கள் புலிப் போராளிகளின் சாவுகளை கொண்டாடுகிறார்கள். சடலங்களின் மீது அசிங்கமான பால்நிலை வன் செயல்களை மேற்கொள்கிறார்கள்.

போராளிகள் போன்று தோன்றும் இவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதும் எமக்குத் தெரியாது. இந்தப்படங்களை பிரபல்யமானவிஞ்ஞானமுறையில்ஆய்வுகள் செய்பவரான வைத்தியர் றிச்சார்ட் யப்பர்ட் பரிசோதனை செய்துள்ளார். சடலங்களில் காணப்படும் காயங்கள் உண்மையானவை. இப்படத்தொகுதிபோலியானவையல்ல என்று முடிவுக்கு அவர் வந்தது மட்டுமன்றி அந்தக் காயங்கள் போரின் போது ஏற்பட்டவையாக தெரியவில்லை. இது போரின் பின்னர் அல்லது ஒளித்திருந்து தாக்கிய போது ஏற்பட்டவை போல் காணப்படுவதாக அவர் ஆச்சரியம் தெரிவித்தார். இந்த சடலங்களில் குறைந்தது இரண்டின் மீது காணப்பட்ட காயங்களை தலைகளில் ஏற்பட்டிருந்த அழமான காயங்களை அவரால் அடையாளம் காண முடிந்தது. உயர் வேகத் துப்பாக்கி வேட்டுகளால் இவை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் காயங்களின் ஒழுங்கைப் பார்க்கும்போது இவை கொலை செய்யப்படுவதற்கான வேட்டுகள் என்பதை தம்மால் ஒதுக்க முடியாது என்றும் கூறினார்.

பிரிட்டிஷ் தமிழ் பேரவையினால் எமக்கு வழங்கப்பட்ட வீடியோ படங்களும் பிரிட்டிஷ் நீதிமன்றங்களுக்கு பணியாற்றுகிறவரான கௌரவமான ஒரு டிஜிட்டல் பட ஆய்வாளரால் சுதந்திரமாக பரிசோதிக்கப்பட்டு உண்மையானவை என்று காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதியாக விரிவான ஆய்வின் பின்னர் அவர் கூறினார். 'எதுவித சோடிப்புகளையோ, கையாடல்களையோ என்னால் காண முடியவில்லை இந்த வீடியோப் படங்கள் உண்மையானவை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளன. காட்டப்படும் சம்பவங்களை அவை சரியாக பிரதிபலிப்பவையாக உள்ளன என்று கூறினார்.

இப்படி தொகுப்பில் மிகத் தெளிவாக உள்ளது என்னவென்றால் பால்நிலை கொடுமைகள்தான் பெண்களின் உடல்கள் ஆண்களின் உடல்கள் அல்ல - உடைகள் களையப் பெற்று மீண்டும் மீண்டும் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளும் மோசமான போர்க்குற்றங்களை சிறுவர்களை போரில் ஈடுபடுத்தியது பொதுமக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீசியது போன்றவைகளை செய்து தான் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தனது சொந்த செயல்களை நியாயப்படுத்துவதற்கு அரசு இவைகளைப் பயன்படுத்த முடியாது.

புலிகளின் தொலைக்காட்சி அறிவிப்பாளர் இசைப்பிரியா உடைகள் களையப் பெற்று கொல்லப்பட்டதான படங்களை நாம் வெளியிட்ட போது, மோதலின் இடையில் சிக்கி அவர் உயிர் இழந்ததாக அரச தரப்பினர் விடாப்பிடியாக கூறி வந்தார்கள். ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்னர் அவர் படைகளினால் உயிருடன் பிடிபட்டிருக்கும் படம் எமக்கு கிடைத்தது. அவர் ஆயுதம் இல்லாமலிருந்தார் உயிருடன் காயமின்றி காணப்பட்டார்.

இசைப்பிரியா மோதலின் போது இடையில் சிக்கிசாகவில்லை. அரச படைகளின் காவலில் இருந்த போது அவர் இறந்துள்ளார்.

அந்த அடிப்படையில் தான் இப்பொழுது கிடைத்துள்ள ஆதாரங்கள் ஆராயப்பட வேண்டும். ஒரு முறையான திட்டவட்டமான வகையில் வன்முறைகள் பயன்படுத்தப்பட்டு கொலைகள் நடைபெற்றுள்ளன. இலங்கையில் இருப்பதாகக் கூறப்படுவது போல் ஒழுக்கமும் செயன்முறையும் கொண்ட ஒரு இராணுவத்தில் இந்த மாதிரி செயற்பாடுகளுக்கு கட்டளையிடும் பொறுப்பானது மிக உச்ச நிலை வரைக்கும் தடயங்களை காண முடியும்.

இதன்கருத்துஎன்னவென்றால்அதுபாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச வரைக்கும் செல்கிறது மற்றும் ஆயுதப் படைகளின் சகல நிலைக் கட்டளைத் தளபதியான அவரது சகோதரர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை நோக்கியும் போகின்றது.

இலங்கை இராணுவத்தின் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் வெளியாக்கப்பட்டுள்ள புதிய காணொளி தொடர்பில் தாங்கள் அறிந்திருக்கவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து, அதன் பேச்சாளர் இதனை தெரிவித்தார்.

சனல் 4 தொலைக்காட்சி, இலங்கை படையினரின் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை உறுதிப்படுத்தும் வகையிலான காணொளி ஒன்றை வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட போது, முதலில் அதற்கு பதிலளிக்க மறுக்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, இந்த காணொளியை தாங்கள் இன்னும் பார்க்கவில்லை என்றும், இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றும் பேச்சாளர் ஸ்டீவன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சியிடம் போதிய ஆதாரங்கள் இருக்கின்ற பொழுது இலங்கையரசினை அசைக்க முடியாத நிலை தோன்றுகிறது. இதன் பின்னணியில் அமெரிக்காவின் ஊன்றுசக்தி இருப்பதாக சனல் 4 ஊடகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஈராக், ஈரான், சிரியா போன்ற நாடுகளில் ஒரு சில போர்க்குற்றங்களை வைத்தே அமெரிக்க அரசு அந்நாட்டிற்கு படையெடுத்து பாரிய அழிவினை ஏற்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்டும், துண்டங்களாக வெட்டிக் கொல்லப்பட்டும் உள்ளனர். ஆண்பெண் இருபாலாரும் மரம் வெட்டும் வாலால் கூட வெட்டிக்கொலை செய்யப்பட்ட காட்சிகளும் இருக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் அமெரிக்க அரசு திடீரென்று இறங்கி தனது செயற்பாடுகளை செயற்படுத்த தயக்கம் காட்டி வருகின்றது.

ஆனால் உண்மையில் யார் இந்த செயல்களைச் செய்தார்களோ அவர்களுக்கான தண்டனை வழங்கப்பட வேண்டும். சனல் 4 வின் ஆவணப்படங்களுக்கு ஐ.நா மன்றம் கூறும் தீர்ப்பு என்னவாக இருக்கப்போகின்றது என்பது இலங்கை அரசிற்கு பெரும் தலையிடியினைக் கொடுக்கப்போகின்றது என்பது தான் உண்மையான விடயம்.

சுழியோடி

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## ஐ.நா வில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேறுமா? எதிர்பார்ப்பில் தமிழர்கள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் 46வது கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில் இலங்கையில் இறுதி யுத்தத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் படுகொலைகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, காணமல் போனோருக்கான தீர்வு என அனைத்துக்குமான பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மற்றும் இணைத்தலைமை நாடுகள் தங்களால் முடிந்தளவு வலுவான தீர்மானத்தை கொண்டு வர முனைந்தாலும் அல்லது நிறைவேற்றினாலும் அது தொடர்பாக எவ்வித கவலையும் அடையப்போவதில்லை என்ற தீர்மானத்திலேயே இலங்கை உள்ளது என அரசாங்கத்தின் முக்கிய பதவிகளில் உள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். இருந்த போதிலும் ஐ.நாவில் கொண்டுவர உள்ள தீர்மானத்தை வெற்றிக் கொள்ள இலங்கை அரசு கடும் பிரயந்தனத்தை மேற்கொண்டு வருகின்றது. இலங்கைக்கு ஆதரவாக சீனாவும், பாகிஷ்தானும் நேரடியாக அறிவித்துள்ள நிலையில் தற்பொழுது பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகனள்இலங்கைக்குஆதரவுவழங்க உள்ளதாக தெரிய வருகின்றது.

இன்னொரு முக்கிய நாடும் இலங்கையின் பிராந்திய அரசியல் இராணுவ நிலைகளுக்கு உதவும் நாடான இந்தியா? எவ்வாறான முடிவை எடுக்கும் என தற்பொழுது கூற முடியாது. ஏனெனில் இலங்கை அரசுக்கு சாதகமான வழியில் பதில் வழங்கினால் அங்கு இடம்பெறவுள்ள மாநிலங்களவை தேர்தலில் பாரிய பின்னடைவை ஆளும் பாரதிஜ ஜனதா கட்சி சந்திக்கும் குறிப்பாக தமிழ் நாட்டில் இதன் எதிரொலி பலமாக எதிரொலிக்கும் தமிழ் நாட்டில் அ.தி.மு.கா தேர்தலில் தோற்றால் அது மத்தியில் உள்ள பா.ஜா.கா கட்சியை பாதிக்கும் ஆகவே இலங்கை விவகாரத்தில் எவ்வாறான முடிவை எடுப்பது என்ற திரிசங்க சொர்க்க நிலையில் இந்தியா உள்ளது.

அத்துடன் இலங்கை வெளிவிவகார அமைச்சில் உள்ள சில உயர்ஸ் அதிகாரிள் இலங்கைக்கு ஆதரவு கோரி ரஷ்சாவிடம் சென்றுள்ளதாக தெரிவருகிறது.

எவ்வாறு இருப்பினும் ஐ.நாவில் சில சமயம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் இலங்கைக்கு நெருக்கடியாக இருக்கப்போவது இல்லை என்பது திண்ணம். இலங்கைக்கு பொருளாதார தடை விதிக்கப்படுமாயின் அது இலங்கைக்கு பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்தப்போவதில்லை. அப்படியொரு நிலை ஏற்ப்பட்டால் சீனாவும், பாகிஷ்தானும் ஏன் இந்தியாவும் உதவி செய்ய முன்வரும் இருந்த பொழுதிலும் இலங்கையை இவ்வாறானதொரு பொறுப்புக்கூறலுக்கு கொண்டு வந்தால் அதுதமிழர்களுக்கான ஓர் சிறு வெற்றியாக அமையும். தீர்மானம் நிறைவேறுமா?

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

## 141

காலாட்படை - காலடி சமமாகத் தரையில் பதிக்கப்பட்டிருக்கும். எவ்வளவு கூடுதலாகக் காலாட்படை செல்கின்றதோ, அவ்வளவுக்குத் தரமாகத் தரை சமப்பட்டிருக்கும். பாதையைப் பயன்படுத்தாமல் காலாட்படை சென்றால் அது ஒடுக்கமான நடைபாதையால் சென்றிருக்கும் ஆட்கள் வழக்கமாக ஒற்றை வரிசையில் செல்வார்கள் இரு வரிசையாக அல்லது மூன்று வரிசையாகச் செல்வது மிகக்குறைவு (அடர்த்தியான காட்டில் நகர்கின்ற மனிதன் தனது உயரத்திலுள்ள கிளைகளை முறிப்பான்.)

குதிரைப்படை -குதிரைகளின் காலடி குளம்பு தெளிவான தடத்தை விட்டு வைக்கின்றது. குதிரையின் சாணமும் தெரியும். (காட்டில் சவாரி செய்பவனின் உயரத்தில் உள்ள கிளைகளை குதிரை முறிக்கின்றது. குதிரை கட்டப்பட்ட மரத்தில் அது மரப்பட்டையை திண்றிருப்பதை காணலாம்.

வண்டித்தொடர் தனது சக்கரத்தின் தடயத்தை விட்டு வைக்கின்றது. வண்டிகள் ஒற்றை வரிசையிலே செல்கின்றன.

ஆட்லறி-இவ் ஆயுதத்தின் நகர்வுச் சக்கரம் வண்டிகள் அனைத்தை விட அகலமானதுடன் தடமும் ஆழமாக பதிகின்றது. வாகானங்கள் தமது சக்கரங்களின் தடங்களை விட்டு வைக்கின்றன. குறிப்பாக ஈரலிப்பான தரையில் அவை நன்றாக தெரிகின்றன. ராங்கிகள் தமது சூழல்பட்டைகளின் தடத்தை தரையில் பதிக்கின்றன. பனிக்காலங்களில் மிக இலகுவாக தடங்களை இனங்காணலாம். அவை பனி படிவுகளின் மேல் நன்றாக பதிகின்றன.

எதிரியின் படைப்பலம் எவ்வளவு

எவ்வேறு வகையான படைகளின் நகர்வுத் தொடர் அணியின் ஆழத்தை கொண்டு (நீளத்தை கொண்டு) எதிரியின் படைப்பலத்தை கணிப்பிடலாம்.

காலாப்படை கொம்பனி 200மீற்றர் வரை நீண்டதாக இருக்கும் பற்றாரியன் 1கீலோ மீற்றர் வரை ரெஜிமென்ட் - 4.5கீலோ மீற்றர் வரையாகும்.

குதிரைப்படை ஸ்குவாட்ரன் 150-200மீற்றர் நீளமாக இருக்கும். ரெஜிமென்ட் 3கீலோ மீற்றர் வரை ஆகும்.

ஆட்லறி பற்றரி 300-400மீற்றர் தூரத்தைபிடிக்கின்றதுமெக்கானிக்கல் இழுவையை கொண்ட டிவிசன் 2.5கீலோ மீற்றர் மெக்கானிக்கல் இழுவையைகொண்டரெஜிமென்ட் 12 கீலோ மீற்றர் வரையிலானது கவச வாகன பிளாட்டுன் 700மீற்றர் தூரத்ததுக்கு நீண்டு செல்கின்றது. டீவிசன் 2.5கீலோ மீற்றர் ஆகும். ராங்கிகள் கொம்பனி 1கீலோ மீற்றர் தூரத்தை பிடிக்கின்ங்றது. ராங்கி படை பற்றாலியன் 3கிலோ மீற்றர் வரையிலாகும்.

எதிரி என்ன செய்ய தாயாராகிறான்.

முன்னேறி தாக்குதலுக்கான அறி குறிகள். எதிரி இடத்தில் புதிய படைகள் ஆயுதங்கள் ராங்கிகள் போன்றன வந்திருக்கும். புகை வண்டி நிலையங்களுக்கு ஆளணி கள் வந்து சேருதல். பலப்படுத்தப்பட்ட முறையில் பொருட்கள் ஏற்றப்படுதல் ஆனால் எதிரியின் பின்புலுத்திற்கு வெற்று வண்டிகள் செல்லுதல் எதிரி வேகமாக வீதிகளை செப்பனிடுவான். பாலங்களை திருத்துவான் புதிய பாதைகளை உருவாக்குவான். ஆற்றங் கரைக்கு செல்லுகின்ற பாதைகள் செப்பனிடப்படும். படகுகளும் மரக்கட்டடைகளும் தெப்பங்களும். தாயார்ப்படுத்தப்படும். மரங்கள் அறுக்கப்படும். தெப்பங்கள் தயார்ப்படுத்தப்படும். இதன் அர்த்தம் யாதெனில் ஆற்றைக் கடந்து செல்வதற்கு தயார்ப்படுத்தப்படுகின்றது.

பின்வாங்களுக்கான அறிகுறிகள் பின்வாங்களுக்கு தயார் படுத்துவதைப்பற்றி எப்பொழுதும் பிரதேசவாசிகள் அறிந்துக்கொள்வார்கள். இதனை சகல சமர் அனுபவங்களும் உறுதிப்படுத்துகின்றன.

உணவு பொருள்,எரிபொருள் சேமிப்புக்கள் பின்புலத்திற்கு அனுப்பப்படுகின்றன. எதிரி வீதிகளை நாசமாக்குவான் பாலங்களை தகர்ப்பான் கடப்புக்கான ஊடகங்களை அழிப்பான் எதிரியின் தொடர்பாளார்கள் தொலைப்பேசி கடத்திகளை கழட்டுவார்கள் எதி-ரி யின் பின்புலத்தில் இருந்து வெற்று வாகனங்கள் பார ஊர்திகள் புகை வண்டிகள் போன்றன வருகின்றதுடன். பின்புலத்திற்கு பொருட்களை கொண்ட வண்டித்தொடர்களும் புகை வண்டிகளும் ெல்லுகின்றன.

தேடுதல் (கைதிகளை பிடித்தல்)

கைதிகளையும் உளறுவாயன்களையும் பிடிக்கும் நோக்கிலான வேவு தேடுதல் என அழைக்கப்படுகின்றது. உன்னிடம் போதுமான நேரம் இருக்குமானால் எதிரியின் பணி மேற்கொள்ளப்படும் ஒழுங்கை முற்கூட்டியே அறிந்து கொள் எங்கெ இரகசிய காவலர்களும் காவல்களும் இருக்கின்றன. எந்நேரத்தில் அவர்கள் மாற்றப்படுகின்றனர். எதிரியின் செய்தி தொடர்பாளர்கள் எந்தப்பாதையால் செல்கின்றனர். எங்கே அதிகாரிகள் வசிக்கின்றனர் போன்றவை ஆகும். கைதியை பிடிக்க மிகவும் சாத்தியமான இடத்தை தெரிந்து கொள்

01.எதிரியின் தொடர்பாளர்களும் செய்தி பரிமாற்றலாளர்களும் சென்று வருகின்ற பாதைகள் காட்டிடையே உள்ள வெளிகள்

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**



# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐசீசீ) பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு கோரி பிரேசிலுக்கான மேன்முறையீடு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐசீசீ) பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு கோரி பிரேசிலுக்கான மேன்முறையீடு




பிரேசிலானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயிர்ப்பான ஓர் உறுப்புநாடாக விளங்குவதுடன் உலகின் அதிகாரம்மிக்க நாடுகளில் ஒன்றாகவும் இருப்பதால் ஐக்கிய இராச்சியம். கனடா. ஜேர்மனி. மொன்ரினேக்றோ மற்றும் வட மசிடோனியா ஆகிய நாடுகளால் இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட 2021ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதியிடப்பட்ட "பூச்சிய வரைவு" என அழைக்கப்படுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு கோருகின்ற மேன்முறையீட்டின் பொருட்டு இதனை நாம் வரைகிறோம்.

இந்நாடுகள் இத்தீர்மானத்தை வரைந்தபோது பாதிக்கப்பட்டோரை கலந்தாலோசிக்கக் கூடவில்லை என்பதுடன் அவை தன்னிச்சையாக வரையப்பட்ட இப் "பூச்சிய வரைவு" தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்க முன்னர் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த மேன்முறையீகளையும் புறக்கணித்துள்ளன.

பிரேசிலானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஓர் உறுப்பினராக இருப்பதால் "பூச்சிய வரைவு" தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐசீசீ) பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்குப் பரிந்துரை செய்வதற்கான சகல உரிமைகளையும் தாங்கள் கொண்டுள்ளீர்கள்.

பாதிக்கப்பட்டோராகவும் பாதிக்கப்பட்டோரின் பிரதிநிகளாகவும் "பூச்சிய வரைவு" தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு தங்களிடம் நாம் மேன்முறையீடு செய்கிறோம்.

இப் "பூச்சிய வரைவு" தீர்மானமானது இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் புரியப்பட்ட தமிழ் மக்களை கொத்துக் கொத்தாகக்குன்றுகுவித்தமைமற்றும்தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கியமை அடங்கலான கொடூரமான குற்றங்களினால் பாதிக்கப்பட்டோரின் அடிப்படை எதிர்பார்ப்புக்களையேனும் பூர்த்தி செய்யவில்லை.

இந்நிலவரத்தின்தீவிரத் தன்மையின் காரணமாக தமிழர்கள் ஒன்றிணைந்து ஒரு மாதத்திற்கு முன்னர் 2021ம் ஆண்டு தை மாதம் 15ம் திகதியன்று. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்த வேண்டியமையை வலியுறுத்தி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். இவ்வழைப்பானது வடக்கு-கிழக்கு சிவில் சமூகத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி (P2P) வரை என்றழைக்கப்பட்ட அண்மைய பேரணியில் பங்குபற்றிய பல்லாயிரக் கணக்காக தமிழர்களினால் மேலும் வலுச்சேர்க்கப்பட்டிருந்தது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்தாமல் விடுதலானது கொடூரமான குற்றங்களைப் புரிந்தோர் நீதியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலுவதுடன் மாத்திரமல்லாது. அது இலங்கையின் அரசியற் தலைவர்களும் பாதுகாப்புப் படைப் பிரதானிகளும் தாம் நீதிக்கு முகங்கொடுக்கத் தேவையில்லை என்பதை நன்கறிந்து கொண்டு. எதுவிதத் தயக்கமும் இல்லாமல் தமிழ் மக்களிற்கு எதிரான சர்வதேசக் குற்றங்களைப் புரிவதற்கான துணிச்சலையும் ஏற்படுத்திவிடும். எனவே இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்தாமல் விடப்படின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளவல்ல இந்த அபாயத்தைத் தீவிரமாகக் கவனத்திற் கொள்ளுமாறு நாம் தங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் தற்போதய உயர் ஆணையாளராகிய மிச்சேல் பச்சலெட் அவர்கள் 2021ம் ஆண்டு தை மாதம் 27ம் திகதியிடப்பட்ட தனது அறிக்கையில், இலங்கையிலுள்ள நிலவரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்த வேண்டியமையை நோக்காகக் கொண்டு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகளுக்கான நான்கு முன்னாள் உயர் ஆணையாளர்கள், ஒன்பது சுயாதீன ஐ.நா. நிபுணர்கள் மற்றும் இலங்கை சம்பந்தமான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வல்லுநர்கள் குழுவின் சகல உறுப்பினர்களும் அடங்கலாக இருபது முன்னாள் ஐ.நா. அதிகாரிகள் "யுத்த விதைகளை விதைத்தல்" எனத் தலைப்பிடப்பட்டு 2021ம் ஆண்டு மாசி மாதம் 18ம் திகதி வழங்கிய தமது அறிக்கையில் இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

"இலங்கையானது தனது நீதித்துறை நிறுவனங்களை அதனுடைய பாதிப்புற்றோரிற்காகச் செயற்பட முடியாதவையாக ஆக்கியுள்ளது என்பதே கருத்திற் கொளள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே, சர்வதேச அல்லது வெளிப்புற நியாயாதிக்கத்தினூடாக நீதியை நிலைநாட்டுவதன் பொருட்டு பாதிப்புற்றோருக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்குமாகப் பணியாற்றுவதற்காக உயர் ஆணையாளரின் பரிந்துரைகளை நாம் மீள வலியுறுத்துகிறோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) போன்ற பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச வழிவகைகள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்" எனக் குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களிற்கு எதிராகப் புரியப்பட்டுள்ள சர்வதேசக் குற்றங்களின் சில உதாரணங்கள்

1. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பொறுப்புக்கூறுதலுக்கான நிபுணர்கள் குழுவினுடைய 2011ம் ஆண்டு பங்குனி மாத அறிக்கையின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஆயுதந் தாங்கிய யுத்தத்தின் இறுதி நிலைகளின் போது போர்க் குற்றங்களும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்களும் புரியப்பட்டுள்ளதாகவும் 40,000 க்கும் மேற்பட்டதமிழ்மக்கள்மரணித்துள்ளதாகவும் நம்பத்தகு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2. இலங்கை மீதான நடவடிக்கை தொடர்பான ஐ.நா செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக் குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையின் பிரகாரம் 2009 ம் ஆண்டின் இறுதிக் கட்ட யுதத்தத்தின் போது 70,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காணாமற் போயுள்ளனர்.

3. அரசாங்கத்தால்யுத்த சூனிய வலயங்கள் (பாதுகாப்பு வலயங்கள்) எனக் குறித்தொதுக்கப்பட்ட பிரதேசங்களில் இலங்கைப் படையினர் அடுத்தடுத்து குண்டுத்தாக்குதல்களையும் எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்ட போது பலர் கொல்லப்பட்டனர். வைத்தியசாலைகள் மற்றும் உணவு விநியோக நிலையங்களின் மீது கூடக் குண்டுகள் வீசப்பட்டன. பலர் பட்டினியின் காரணமாக இறந்ததுடன் மருத்துவ சிகிச்சையின்மையால் குருதிப்பெருக்கேற்பட்டும் மரணித்தனர்.

4. 2017ம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது (ஐரீஜேபீ). தமிழ்ப் பெண்கள் பாலியல் அடிமைகளாக கையாளப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட கற்பழிப்பு முகாங்கள் பற்றிய விபரங்களை ஐ.நா விடம் கையளித்தது.

5. ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்திற்குரிய அறிக்கைக்கு அமைவாக, இலங்கையில் 90,000 க்கும் மேற்பட்ட யுத்தமூல விதவைகள் உள்ளனர்.

6. குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் அடங்கலாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமற்போயுள்ளனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஐநாவின் பணிக்குழுவானது உலகில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் இரண்டாவது அதிகூடிய எண்ணிக்கை இலங்கையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சர்வதேசக் குற்றங்களுக்குரிய பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள பொய்யான வாக்குறுதிகளின் வரலாறு அடுத்துவந்தஇலங்கை அரசாங்கங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் (UNHCR) தீர்மானங்களை அமுறப்படுத்தத் தவறியுள்ளமையையும் தாங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நாம் விரும்புகிறோம்.

முன்னய அரசாங்கமானது அது இணையனுசரணை வழங்கிய தீர்மானத்தை அமுற்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது மாத்திரமல்லாது. முரணாக சனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களும் தாம் UNHCR தீர்மானத்தை அமுற்படுத்த மாட்டோம் எனத் திரும்பத்திரும்பவும் ஆணித்தரமாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போதய புதிய அரசாங்கமானது ஒரு படி கூடுதலாகச் சென்று தீர்மானங்கள் 30/1, 34/1 மற்றும் 40/1 களுக்குரிய இ ணை ய னு ச ர ணை யி லி ரு ந் து விலகியுள்ளதுடன் யூஎன்எச்ஆர்சீ பொறுப்புக்கூறல் செயற்பாட்டிலிருந்தும் வெளிநடப்புச் செய்துள்ளது.

மேலும், UNHCR இனை இழிவுபடுத்தும் விதமாக, சிறுவர்கள் அடங்கலாக பொதுமக்களைக் கொலை செய்தமைக்காக தண்டிக்கப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்த ஒரேயொரு படைச்சிப்பாயும் தற்போதய ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், போர்க் குற்றங்கள் புரிந்தமைக்காக நம்பத்தகு முறையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பல்வேறு சிரேஷ் இராணுவ அதிகாரிகளுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருப்பதுடன் "யுத்த நாயகர்களாக" ஆகவும் மதிப்பளிக்கப்படுகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் யுத்த குற்றவாளியாக சந்தேகிப்படுகின்ற ஓர் உத்தியோகத்தர் நான்கு - நட்சத்திர அதிபதியாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

எமது மேன்முறையீட்டைத் தீவிரத்தன்மையுடன் கருத்திற்கொள்வதன் பொருட்டும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்த வேண்டியமை "பூச்சிய வரை" தீர்மானத்தில் உள்ளடக்குவதன் பொருட்டும் தங்களிற்கு நாம் மேன்முறையீடு செய்கின்றோம்.

**வேலன் சுவாமி**

# வெள்ளை வான் -கறுப்பு வான் கடத்தல்களின் பின்னால் உள்ள மர்மங்கள் - நிராஜ் டேவிட்

வெள்ளை வான், கறுப்பு வான் கடத்தல்கள் தமிழர் வாழும் பிரதேசங்களில் தொடர்ந்தபடிதான் இருக்கின்றன. யுத்தம் முடிவுக்கு வந்து, இனப்பிரச்சனைக்கான அரசியல்தீர்வுபற்றிப்பேசிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலும், தமிழ் இளைஞர்கள், யுவதிகள் இது போன்ற வான்களில் வருபவர்களால் கடத்திச் செல்லப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் இடம்பெற்றபடிதான் இருக்கின்றன. அண்மையில் மட்டக்களப்பின் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் இதுபோன்ற ஒரு கறுப்பு வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டு, பின்னர் தப்பி வந்த ஒரு மாணவி வெளியிட்ட தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவே இருந்தது. அந்த மாணவியை கடத்திய வானில் கைகள், வாய் கட்டப்பட்ட நிலையில் மேலும் ஆறு சிறுமிகள் இருந்ததாக அவர் தெரிவித்திருந்தார்.

யாழ்குடாவிலும், இது போன்று வெள்ளைவான் கடத்தலில் இருந்து தப்பி வந்த ஒரு சிறுமி, தம்மைக் கடத்தியவர்கள் வசம் மேலும் பல சிறுமிகள் அகப்பட்டிருந்ததாகத் தெரிவித்திருந்தார். வடக்கு கிழக்கில் இது போன்ற வெள்ளை வான் கறுத்த வான் கடத்தல் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்று வருவதாகவே அங்கிருந்து கிடைக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில சம்பவங்கள் ஊடகங்களில் வெளிவருகின்றன. பல சம்பவங்கள் வெளி வராமலேயே மறைக்கப்பட்டுவிடுகின்றன. தமிழ் சிறுமிகள், மாணவிகள், பெண்கள் எதற்காக கடத்தப்படுகின்றார்கள்? கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடக்கின்றது? யாரால் இந்த கடத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன? வடக்கு கிழக்கில் இலட்சத்திற்கும் அதிகமான சிறிலங்காப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அவர்களது பாதுகாப்பையும் மீறி இந்த தொடர் கடத்தல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன? இந்தக் கடத்தல்களின் பின்னணியில் சிறிலங்கா அரச படைகள் இருப்பதாக எழுப்பப்படும் சந்தேகத்தில் உண்மை இருக்கின்றதா? விடை தெரியாத இதுபோன்ற கேள்விகள் ஒருபுறம் இருக்க, வெள்ளைவான் கடத்தல்கள் பற்றி முன்னர் வெளிவந்த சில உண்மைகளை இச்சந்தர்பத்தில் நாம் மீட்டுப் பார்ப்பது அவசியம் என்று நினைக்கின்றேன்.

இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த வெள்ளை வான்; பீதி இன்று நேற்று ஏற்பட்ட ஒரு விடயம் அல்ல. கடந்த இரண்டு தசாப்த காலமாக வெள்ளை வான் கடத்தல்கள் வடக்கு, கிழக்கு, கொழும்பு போன்ற பிரதேசங்களில் மிக அதிகமாக இடம்பெற்று வருகின்றன. வெள்ளைவான் கடத்தல்கள் முதன் முதலில் மட்டக்களப்பில்தான் ஆரம்பமாகியிருந்தது. 1990ம் ஆண்டு மட்டக்களப்பு நகரம் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாக இருந்த காலம் முதற்கொண்டு அவ்வப்பொழுது இந்த வெள்ளை வான்; தொடர்பான அச்சம் மட்டக்களப்பு மக்களை கடந்து சென்றிருக்கின்றது. 1990ம் ஆண்டு 2வது ஈழ யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரும், புறநகர் பகுதிகளும் வெள்ளை வான் பீதியால்; நடுநடுங்க ஆரம்பித்தன. கறுப்பு நிற கண்ணாடியுடன் பவணி வந்த வெள்ளை வானில் பிடித்துச் செல்லப்பட்டவர்கள் மீண்டு வந்ததாக வரலாறே கிடையாது. தெருக்களில் செல்லும் இளைஞர், யுவதிகளைப் பிடித்திழுத்து வாகனத்தினுள் ஏற்றிக்கொண்டு சென்றுவிடுவார்கள். பின்னர் அவர்களுக்கு என்ன நடந்து என்று இன்று வரை எவருக்குமே தெரியவில்லை.இதே போன்று அக்காலத்தில் ஒவ்வொரு தெருமுனையிலும் அமைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவச் சோதனைச் சாவடிகளிலும் சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்திவைக்கப்படும் இளைஞர்களும், இந்த வெள்ளை வானில் ஏற்றப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டால் அவர்கள் திரும்பமுடியாத இடத்திற்கு அனுப்பப்பட்டு விடுவார்கள். அதே வேளை மட்டக்களப்பில் ஒவ்வொரு முக்கிய சந்திகளிலும் இளைஞர்களின் உடல்கள் டயரில் போட்டு எரியூட்டப்பட்டன. அவ்வாறு எரியூட்டப்பட்ட உடல்களின் சொந்தக்காரர்கள் யார், எவர் என்று அடையாளம் காணமுடியாத அளவிற்கு அந்த பிணங்கள் சாம்பலாகும் வரை எரியூட்டப்பட்டன. மட்டக்களப்பில் பல பகுதிகளிலும் ஆங்காங்கு ஷடயரில்; போட்டு எரியூட்டப்படும் பிணங்கள், வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட தங்களுடைய பிள்ளைகளினதாகத்தான் இருக்கும் என்று தமக்குத்தாமே நினைத்துக்கொண்டு பெற்றோர் வாழாதிருந்துவிடுவார்கள். ஏனெனில் அப்பொழுது மட்டக்களப்பில் நடமாடித் திரிந்த அந்த வெள்ளை வானுக்கு ஸ்ரீலங்காப் பொலிசாரோ, அல்லது ஸ்ரீலங்கா இராணுவத்தினரோ உரிமை கோருவது கிடையாது.

அந்த காலகட்டத்தில் ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசா கண்கள் தானம்; செய்வதில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தார். ஜப்பான் உட்பட பல நாடுகளுக்கும் ஆயிரக்கணக்கான கண்களைத் தானம் செய்து அக்காலத்தில் பிரேமதாசா சர்வதேச ரீதியில் பெரும் புகழ் சம்பாதித்திருந்தார். அக்காலகட்டத்தில் மட்டக்களப்பில் வெள்ளை வானில் கடத்தப்பட்ட இளைஞர்களின் கண்களைத் தோண்டியெடுத்தே பிரேமதாசா கண் தானம் செய்து வந்ததாக அந்நாட்களில் மக்கள் மத்தியில் பரவலாகப் பேச்சடிபட்டது. மட்டக்களப்பில் நடமாடித் திரிந்த வெள்ளை வானின் பின் புறத்தில் ஒரு பரிசோதனைக் கூடம் இருப்பதாகவும், கடத்தப்படும் இளைஞர்களின் கண்களை உடனடியாகவே பிடுங்கிப் பாதுகாத்துவிட்டு, பின்னர் அவர்களைக் கொலை செய்து டயர்களில் போட்டுஎரித்துசாம்பலாக்கிசாட்சியமில்லாமல் மறைத்துவிடுவதாகவும் அக்காலத்தில் மக்கள் அச்சத்துடன் பேசிக்கொண்டார்கள்.

ஸ்ரீலங்கா பொலிஸில் அக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்டிருந்த சீ.எஸ்.யூ. (C.S.U. –CounterSubversiveUnit)என்றவிஷேட படைப்பிரிவினரே இந்த வெள்ளை வானில் நடமாடித்திரிந்ததாக பின்நாட்களில் செய்திகள் வெளியாகி இருந்தன. மட்டக்களப்பு பைண-'யர் வீதியிலுள்ள வனஇலாகா அலுவல-கம் (காட்டுக் கந்தேர்), அரசடி பொது நூலகம் போன்ற இடங்களில் முகாமிட்டுச் செயற்பட்ட இந்தப் சீ.எஸ்.யு. பிரிவினர் மக்களைத் துன்புறத்துவதிலும்,சித்திரவதைசெய்வதிலும் மிகவும் பிரசித்திபெற்று இருந்தார்கள். கெரில்லாக்களை ஒடுக்குவதற்கென்று விஷேட பயிற்சி பெற்று, ஒரு தனிப்பிரிவாக இயங்கிவந்த இந்தப் பிரிவனரே அக்காலத்தில் வெள்ளை வானைப் பயன்படுத்தி வந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.கால ஓட்டத்தில் இந்த விடயம் மறக்கப்பட்டு விட்டது. எமது அரசியல்வாதிகளும், மனித உரிமை ஆர்வலர்களும் இந்த விடயம் சுய நலத்திற்கும், சுய விளம்பரங்களுக்கும் உதவாத ஒரு விடயம் என்பதால், இதனைத் தூக்கி கிடப்பில் போட்டுவிட்டு வேறு சுவாரசியமான, இலாபம் தரும் விடயங்களைக் கவணிக்கச் சென்றுவிட்டார்கள். ஆனால் இந்த வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் பரவியிருந்த வதந்திகளில் உண்மை இருக்கத்தான் செய்தது என்கின்ற விடயம் பின்நாட்களிலேயே வெளித்தெரிய வந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், வெளிநாட்டு புலனாய்வு நிருபர் (Investigative Journal-ist) ஒருவரால் இந்த விடயம் நிரூபிக்கப்பட்டு மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு படையினர் தமிழ் கைதிகளிடம் இருந்து மனித உறுப்புக்களைத் சூறையாடி வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து வருவதாக வெளியான செய்திகள் பற்றி ஆராய்வதற்காக ஜப்பானின் மிகவும் பிரபல்யமான ஷபுலனாய்வு நிருபர்; (Inves tigative Journalist) அக்கியோ நகஜிமா கொழும்பு வந்திருந்தார். (அக்காலத்தில் இலங்கையில் இருந்து கண்கள், சிறுநீரகம் போன்றன ஜப்பானுக்கே அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஜப்பானுக்கு பெருமளவில் கண்தானம் செய்து அப்போதைய ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஜப்பானிய அரசிடம் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. எனவே இலங்கையில் பலவந்தமாக களவாடப்பட்ட உறுப்புக்களே ஜப்பானுக்கு கொண்டுவரப்படுகின்றது என்ற செய்தி ஜப்பானில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.) இலங்கை வந்த ஜப்பானிய நிருபர் அக்கியோ நகஜிமா தனது ஜப்பானிய நண்பரான ஷிமாமோட்டா என்பவருடன் இணைந்து மனித உறுப்புக்கள் சூறையாடல் தொடர்பான நீண்ட புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டார். இவர்கள் இருவரும் இணைந்து பல தகவல்களைத் திரட்டினார்கள். சிறிலங்காப் படைகள் ஜே.வீ.பி.யினருடன் சண்டைகளில் ஈடுபட்ட காலத்திலிருந்து இந்த மனித உறுப்பு கொள்ளை இலங்கையில் நடைபெற்று வருவது பற்றி அவர்கள் கண்டறிந்தார்கள். ஆயிரக்கணக்கான ஜே.வி.பி. இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு டயரில் போட்டு எரிக்கப்பட்டபோது, அவர்களின் உடலின் உறுப்புக்கள் ஏற்கனவே அகற்றப்பட்டிருந்ததாக அவர்கள் சந்தேகித்தார்கள். 1990ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ம் திகதி மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போயிருந்த 168 இளைஞர் யுவதிகள் உட்பட அக்காலப் பகுதியில் ஸ்ரீலங்காபடையினரால் கடத்திச்செல்லப்பட்டு காணாமல் போன ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் கண்கள், சிறுநீரகம் போன்ற மனித உறுப்புக்கள், பத்திரமாக அகற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டதாக, அந்த ஜப்பானி புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் கண்டறிந்தார்கள்.

1991ம் ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வெரு மனித உறுப்பின் விலையும் சுமார் மூவாயிரம் அமெரிக்க டொலர்கள். 1991ம் ஆண்டில் ஜப்பானில் மாத்திரம் 30 ஆயிரம் பேர் சிறுநீரக மாற்று சிகிச்சைக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். மனித உறுப்பு பற்றாக்குறை காரணமாக வருடமொன்றிற்கு 600 முதல் 700 ஊறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகள் மத்திரமே ஜப்பானில் அப்பொழுது நடைபெறுவதாக தகவல் வெளிடயிட்ட பத்திரிகையாளர் அக்கியோ நகஜிமா, இதுபோன்ற உறுப்புக்களுக்கு ஜப்பானில் அதிக கிராக்கி இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். உறுப்புக்களைத் திருடி பெரும் பணத்திற்கு விற்கும் நோக்கத்துடன்தான் இலங்கையின் கிழக்கில் பெருமளவானோர் ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

கிழக்கில் கைதானோரின் உறுப்புக்களைச் ஸ்ரீலங்காப் படையினர் சூறையாடியதால்தான் அவர்களின் உடல்கள் உடனடியாகவே புதைக்கப்பட்டன அல்லது எரிக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்திருந்தார். (கிழக்கில் அக்காலகட்டத்தில் 5000 இற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயிருந்த போதிலும் இன்று வரை எவரது உடலும் உருப்படியாகக் கண்டெடுக்கப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.)



யாப்பானியப் புலனாய்வு நிருபர் அக்கியோ நகஜிமா மனித உறுப்பு சூறையாடல்கள் தொடர்பாக தான் இலங்கையில் கண்டறிந்த உண்மைகளை ஷமைனிச்சி சிம்புன்; (MAINICu;I Su;IMBUN) என்ற ஜப்பானியப் பத்திரிகையில் விபரமாக வெளியிட்டிருந்தார். ஜப்பானில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்த இந்தத் தொடர் கட்டுரைகளின் சில பகுதிகளை அங்கிலத்தில் மொழிபெயர்த்து ASIA FOUNDATION வெளியிட்டிருந்தது.

இந்த விடயம் அமெரிக்கப் பத்திரிகையான ஷசான் பிரன்சிஸ்கோ எக்சாமினர்; (SAN FRANCISCO EXAMINER) இலும் பின்னர் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. சர்வதேச நாடுகளின் கவனம் அப்பொழுது குவைத் -ஈராக் விவகாரத்திலும், இந்தியாவின் கவனம் ராஜீவ் காந்தியின் படுகொலையிலும் இருந்ததால் இதுபோன்ற அப்பட்டமான ஒரு மனித உரிமை மீறல் விவகாரம் கவனிப்பாரற்று விடப்பட்டது.

பின்னர் 1994ம் ஆண்டு, மூன்றாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமான போது, மறுபடியும் இந்த வெள்ளை வான் பீதி மக்கள் மத்தியில் பரவ ஆரம்பித்தது. ஆனால் இம்முறை கொழும்பிலேயே இந்தப் பயம் ஏற்பட்டிருந்தது. அக்காலத்தில் கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் நடமாடிய தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு அவர்கள் உடல்கள் பொல்கொடை வாவியில் வீசப்பட்டன. இது தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியளாலர் ச.பிரகாஸ் இவ்வாறு காணாமல் போனவர்கள் அனைவருமே வெள்ளை நிற வான் ஒன்றிலேயே கடத்தப்பட்டதாக செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து கொழும்பு வாழ் தமிழர்களிடையேயும், இந்த வெள்ளை வான் அச்சத்துடன் பிரஸ்தாபிக்கபடலாயிற்று. இது போன்ற ஒரு வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் ஒரு தனிமையான இடத்தில் அடைத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டபோது, தெய்வாதீனமாகத் தப்பிவந்தசெய்திபத்திரிகைகளில்வெளிவந்து, அக்காலத்தில் நிலவிவந்த வெள்ளை வான்; பீதியை மேலும் அதிகரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக கொழும்பில் நடமாடித் திரிந்த வெள்ளை வானின் பின்னணியில், மட்டக்களைப் சேர்ந்தவரும், முன்னாள் புளொட் உறுப்பினரும், பின்னர் ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவில் ஒரு அதிகாரி தரத்தில் செயற்பட்டவருமான ஷபுளொட் மோகன்: என்பவரின் பெயர் அடிபட்டது. (சமாதான காலத்தில் 31.07.2004 அன்று புளொட் மோகன்(கந்தையா யோகராசா) விடுதலைப் புலிகளால் கொழும்பில் வைத்துச் சுட்டுக்கொள்ளப்பட்டார்)

11ஆம் ப்கம் பார்க்க...

# 2040 ஆம் ஆண்டளவில் இலங்கை அமெரிக்காவின் காலனித்துவ நாடாக மாற்றம் பெறலாம்

அனைத்துலக நாடுகளினதும் பிரச்சினைகளில் ஒன்றுதான் அமெரிக்க நாட்டின் தலையீடாகும். முழு அரபு இராச்சியத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும் என்பதே அமெரிக்காவின் தற்போதைய இலக்காகும். அதனொரு கட்டமாகவே அமெரிக்காவின் அண்மைக்கால செயற்பாடுகள் அமைகிறது எனலாம். தற்போது அதனது தேவை கருதி பிரச்சினையை இலங்கை பக்கம் திருப்பிவிட்டுள்ளது. அது எவ்வாறெனில் 10 வருடாங்களுக்குப் பின்னர் இலங்கையை தனது காலனித்துவ நாடாக மாற்றியமைப்பதற்கான திட்டமாகும். ஆரம்பகாலத்தில் இலங்கை மன்னராட்சிக்கும் அதனைத்தொடர்ந்து அந்நியராட்சிக்கு உட்பட்ட நாடாகவே காணப்பட்டது. 1505 - 1658 ஆம் ஆண்டுவரை போர்த்துக்கேயரும், 1958 - 1796 வரை ஒல்லாந்தரும், 1796 - 1948 வரை ஆங்கிலேயரும் இலங்கையை ஆட்சி செய்துவந்தனர்.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப்பிரதேசங்களைக் கைப்பற்றினார்களே தவிர அவர்களினால் கண்டி இராச்சியத்தை கைப்பற்றமுடியவில்லை. அத்துடன் இவர்கள் சட்டம், சமயம் ஆகிய துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். ஆனால் அரசியலில் பாரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தவில்லை. ஆங்கிலேயர் கரையோரங்களை கைப்பற்றியது மாத்திரமின்றி கண்டி இராச்சியத்தினையும் கைப்பற்றி, பொருளாதார ரீதியிலும் பல மாற்றங்களைக் கொண்டுவந்தனர். அதுவே இன்று அத்துறையில் ஏற்பட்டுள்ள பாரிய அபிவிருத்திக்கு காரணமாகும். அரசியலில் பிரித்தானியா மாதிரியான பாராளுமன்ற ஆட்சிமுறைமையையும்,பொருளாதாரத்தில் பெருந்தோட்டத்துறையில் ஏற்று மதி இறக்குமதி கொண்ட பொருளாதாரத்தையும் உருவாக்கினர்.

இவர்களால் ஏற்படுத்தப்பட்ட இம்மாற்றங்களே இன்றைய இலங்கையின் நிலைக்குக் காரணமாக உள்ளது. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. 1976 ஆம் ஆண்டு பிரித்தானியா இலங்கையின் பெரும்பாலான கரையோரங்களைக் கைப்பற்றினாலும் 1798 ஆம் ஆண்டிலேயே இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

1798-1802 ஆம் ஆண்டுவரை இலங்கையில் நடைபெற்ற ஆட்சி இரட்டையாட்சியாகும். அதாவது வரி, வர்த்தகம் போன்ற விடயங்களுக்கு பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனிகள், பாதுகாப்பு சிவில் போன்ற விடயங்களுக்கு பிரித்தானிய அரசையும் இணைத்து கொண்டுசெய்த ஆட்சிதான் இரட்டை ஆட்சியாகும். 1892 இல் கைச்சாத்திடப்பட்ட எமினியஸ் உடன்படிக்கையைத் தொடர்ந்து இலங்கை பிரித்தானிய காலணித்துவத்திற்கு உட்பட்ட நாடாக மாறியது.

இந்த முறைமையினை மாற்றி அமெரிக்கா தனது காலணித்துவத்துக்குக்கீழ் உட்பட்ட நாடாக இலங்கையை மாற்றியமைக்க தீர்மானித்துள்ளது. இலங்கையின் அனைத்து நிர்வாக விடயங்களும் பிரித்தானிய அரசினால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. அவருக்கு ஆலோசனை கூற ஒரு சபை உருவாக்கப்பட்டது. அதில் இராணுவத்தளபதி, குடியேற்ற நாட்டு காரிய தரிசி, பிரதம நீதியரசர்கள் போன்றோர் இடம்பெற்றனர்.

1803 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தினை கைப்பற்றும் நோக்கில் பிரித்தானிய படையெடுப்பொன்று மேற்கொண்ட போது, கண்டியர்களின் கொரில்லாத்தாக்குதல், மலேரியா நோய், காட்டுநோய் போன்றவற்றின் காரணமாகவும் சீரற்ற காலநிலை காரணமாவும் போராட்டம் தோல்வியடைந்தது. பிரித்தானியர் கண்டி இராச்சியத்தினைக் கைப்பற்ற முனைந்தபொழுது கண்டி பிரதானிகளின் சில நிபந்தனைகளுக்கு உடன்பட்டிருந்தது. கண்டி இராச்சியம் தனியாக ஆளப்படும். பௌத்த மதம் அரச ஆதரவோடு தொடர்ந்தும் உரிய முறையில் பேணிப்பாதுகாக்கப்படும். அதே போன்று இன்றைய காலகட்டத்தில் அமெரிக்க அரசு இலங்கையரசுடனான இரகசிய பேச்சுக்களை அரச இராஜதந்திரிகளுடன் பேசிவருகிறது.

ஏற்கனவே அமெரிக்க அரசு இலங்கையில் அமைந்துள்ள திருகோண மலை, கொழும்புத் துறைமுகங்களை, கடற்கரையோரங்களை தன்னகத்தே கொண்டுவர முயற்சித்துவருகிறது. இதற்கு முட்டுக்கட்டையாக இந்தியா,சீனா போன்ற நாடுகள் விளங்குகின்றன. பலமுறை அமெரிக்க அரசு இலங்கை அரசுடன் இரகசிய பேச்சுக்களை நடத்தியபோதிலும் அவை சாத்திய மற்றுப்போயின. ஆனால் தற்பொழுது மீண்டும் ஒரு உலகப்போர் ஏற்படுமானால் ஆசியப்பிராந்தியத்தில் தனக்கான ஒரு தளம் இல்லாமல் போகும் என்கின்ற காரணத்தினால் தனது போர் வியூகங்களை சரியாக செய்யமுடியாமையினாலும் அமெரிக்க அரசு இலங்கையரசிற்கு பல நிபந்தனைகளைக் கொடுத்துள்ளது. போர்க்குற்றம் தொடர்பில் இலங்கையரசை ஆரம்பகட்டத்தில் நெருக்கிய அமெரிக்கா தற்பொழுது அதனை தளர்த்திவிட்டுள்ளது.

காரணம் அமெரிக்கா எவற்றை யெல்லாம் கேட்கிறதோ அவற்றையெல்லாம் தருவதற்கு இலங்கையரசு தயாராக இருக்கிறோம் என வாக்குறுதியளித்தமையினாலேயே. இன்று இலங்கையரசு போர்க்குற்றம் தொடர்பில் துணிவான அறிக்கைகளை தெளிவாக வெளியிட்டிருக்கின்றது. போர்க்குற்ற விசாரணைகளை மும்முரமாக நின்று செயற்படுத்தியது அமெரிக்காதான். ஆனால் தற்பொழுது ஓரமாக ஓதுங்கியுள்ளது. அரசியல் இலாபத்திற்காக எமது தாய்நாட்டை அந்நியர்களின் காலணித்துவத்திற்கு உட்படுத்தும் ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா தான் நினைத்ததை சாதித்துவிடும் பட்சத்தில் ஒரு சர்வாதிகார போக்கை கடைப்பிடிக்கும் நிலைமை ஏற்படும். இதேபோன்றே அக்காலகட்டத்தில் பிரித்தானியர்களும் செய்தார்கள். கண்டி இராச்சியம் தொடர்பாக 1818 ஆம் ஆண்டில் கண்டியில் ஓர் கிளர்ச்சி ஏற்பட்டது. அதனை வெள்ளைக்கிளர்ச்சி என்பர். பிரித்தானிய இராணுவத்தினரால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர். இந்த நிலையில் 1827 இல் இலங்கையின் நிர்வாகத்தை சீர்படுத்துவதற்காக எதிர்காலத்தில் கண்டிக்கலவரம் போன்ற பெரியதொரு கலவரம் வரக்கூடாது என்பதற்காகவும் முழு இலங்கையையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதற்காகவும் பெருந்தோட்டத்துறையை தனியாருக்கு தருவதாக ஒருதீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கூறப்பட்ட கொள்கைகளை சரியான முறையில் நிறைவேற்றுவதாக கோல்புறூக் .கெமருன் தலைமையில் ஒரு குழு இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அக்குழுவினர் இலங்கையில் சில காலம் தங்கியிருந்து பல்வேறு தரப்பினரை சந்தித்து குறிப்பாக கமருன் சட்டம், நீதி தொடர்பாகவும் கோல்புறூக் அரசியல் தொடர்பாகவும் ஆராய்ந்து அதனடிப்படையில் அரசியல் அமைப்பொன்றை உருவாக்கினர்.

இதுவே 1833 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. இதுவே 1833 ஆம் ஆண்டில் கோல்புறூக்,கமருன் சீர்திருத்தம் என அழைக்கப்பட்டது. கோல்புறூக் ஆணைக்குழுவின் நிபந்தனைகள்:



1. இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவருவதற்குதேவையான வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சுதந்திரமான சந்தைச் சூழலை ஏற்படுத்தல்.

2. குடியேற்ற நாட்டாட்சி நிர்வாக அதிகாரிகள் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுவதை தடைசெய்தல்.

3. இலங்கை நிர்வாகத்தை ஒரு குடையின் கீழ் கொண்டுவருதல்.

4. மலைநாட்டில் நிலவிய தனியான நிர்வாகத்தை முடிவுக்கு கொண்டுவருதல்.

5. இலங்கையின் நிர்வாகத்தை 05 மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்தையும் அரசஅதிபர்களுக்கு கீழ் கொண்டுவருதல்.

6. இலங்கைக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் சுதேசிய உயர் வர்த்தக உறுப்பினரும் நிர்வாகத்தில் பங்கேற்கும் முகமாக பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ளுதல்.

7. தேசாதிபதிய சட்ட நிர்வாக இணைத்து ஆட்சிபுரியும் ஒருவராக மாற்றல்.

முக்கிய விடயம் என்னவென்றால் அமெரிக்காவின் காலணித்துவ நாடாக இலங்கை மாற்றமடையும் போது ஒரு சுதந்திரமான நீதித்துறையிலான உயர் நீதிமன்ற நீதிபதியொருவரை அமெரிக்க அரசினால் நியமிக்கப்படுவார் அதன்படி,

உயர் நீதிமன்ற தலைமையின் கீழ் ஒரு ஐக்கிய நீதிமன்றினை உருவாக்கல், மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்கல், சுதேசி அவர்களுக்கும் தனியாக இயங்கிவரும் நீதிமன்றங்களை உரிய நடவடிக்கை எடுத்தல், இலங்கையில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்.

1833-1910 ஆண்டுவரை சுமார் 77 ஆண்டுகள் வாழும் கோல்புறூக் அரசியலில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இங்கு உருவாக்கப்பட்ட சட்டமன்றம் எதிர்காலத்தில் பாராளுமன்றம் உருவாக வழியமைத்துக்கொடுத்தது, இதன் காரணமாக பிரதிநிதித்துவ முறைமை அறிமுகமானது, தேசாதிபதியிடம் செறிந்து காணப்பட்ட அதிகாரங்கள் சட்ட நிர்பணை சபையிடமும் சட்ட நிர்வாக சபையிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆங்கிலக்கல்வி அறிமுகமானது. ஆங்கிலம் கற்ற உயர் மத்தியினர் எழுச்சிபெறச்செய்தனர்.

வலுவேறா கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த அரசியல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. பொருளாதார விடயத்தில் தனியொரு பங்கேற்பான வாய்ப்பு இடம்பெற்றது. இதனால் இந்திய பாகிஸ்தானிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுசெய்தனர்.

இதன் காரணமாகவே இலங்கையில் ஆங்கிலம் பேசுவோரின் தொகை அதிகரிக்கத்தொடங்கியது. கலாசாரம் மாற்றம் பெறத் தொடங்கியது. இந்த யாப்பு திருத்தம் தொடர்பில் ஏற்பட்ட குறைாபடுகளை பார்க்கின்றபொழுது,

1. பொருளாதார முறைமையின் காரண மாக கரையோரவிவசாயமுறைமைநடவடிக்கைகள் பாதிக்கப்பட்டது.


2.ஆங்கிலக்கல்வியின் பரவல் இலங்கையின் பாரம்பரிய கலாசாரத்தை சீர்குலைப்பதாக அமைந்தது. இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவம் பல குறைபாடுகளைக் கொண்டதாக காணப்பட்டது.

இவ்வரசியல் சீர்திருத்தம் இலங்கைக்கு பொருத்தமானதாக அமையவில்லை. 77 ஆண்டு காலமாக இந்த கோல்புறூக் அரசியல் இருந்து வந்தது. தற்பொழுதும் பல அரசியல்வாதிகளாலும் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் மாற்றம் ஒன்று இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை அடிப்படையாக வைத்துப்பார்க்கின்றபொழுது, மாட்டுக்கு மணிகட்டப் போவது யார்? அது அமெரிக்காவாகத்தான் இருக்கும். அக்காலம்தொட்டு இன்று வரைக்கும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்குமான தொடர்புகள் இருந்தவண்ணமே உள்ளன. இவை படிப்படியாக தோற்றம் பெற்று ஆசியப்பிராந்தியத்தில் தனக்கு ஒரு பிரச்சினை வருகின்ற பொழுது அதனை மாத்திரம் கரிசணை கொண்ட இலங்கை அரசின் மீது அமெரிக்கா பல நெருக்கடிகளை கொடுக்கிறது.

எந்தவொரு நாட்டிற்கும் நாம் அடிபணியப்போவதில்லை என சவால் விட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அவ்வாறே நடந்து கொள்வாராக இருந்தால் அமெரிக்க காலணித்துவம் உருவாவதை தடுத்து நிறுத்தமுடியும் இல்லையெனில் இலங்கை தேசம் ஒரு சோசலிசத்தை நோக்கிச்செல்லும் அதேவேளை தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் எவ்வாறு தொழில் செய்து வாழ்கிறார்களோ அவ்வாறான நிலைமையே ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

நெற்றி பொறியன்

# வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் நிலம் அபகரிக்கப்படுவதானது தமிழ் இனம் அழிக்கப்படுவதற்குச் சமனானது



வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் நிலம் அபகரிக்கப்படுவதானது தமிழ் இனம் அழிக்கப்படுவதற்குச் சமனானது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நில அபகரிப்பு ஒரு இனப் படு கொலையாகவே பார்க்கப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு, 'தமிழர் தாயகத்தை இழத்தல்' என்ற தலைப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்த மாநாடு இலங்கை நேரப்படி அன்று (சனிக்கிழமை) மாலை சூம் தொடர்பாடல் ஊடாக இடம்பெற்றிருந்தது.

இதன்போது, உரையாற்றிய சி.வி. விக்னேஸ்வரன், "தமிழ் மக்கள் இந்த நாட்டின் சுதேச (முதலாவது) குடிமக்கள். 3000 ஆண்டுகளுக்கு மேலாக நாம் இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றோம். அந்நியர்களின் காலனியாதிக்கம் 1505ஆம் ஆண்டு ஏற்படும் வரை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் நிலப்பரப்பு தமிழ் மன்னர்களின் முழுமையான ஆளுகையின் கீழ் செழிப்பாக இருந்தது.

பிரித்தானியர்களின் ஆட்சியின் போது 1833ஆம் ஆண்டு இலங்கையின் நிர்வாகம் ஒன்றாக்கப்பட்டு பின்னர் 1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த பின்னர் அதிகாரம் சிங்கள மக்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் எமது நிலங்கள் அதிகார பலத்தின் மூலம் சிங்கள அரசாங்கங்களினால் அபகரிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது.

1970களில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் கிழக்கு மாகாணத்தின் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி நிலம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது. எமக்கு எதிரான இந்த நில ஆக்கிரமிப்பு என்பது சத்தம் இன்றி எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு பெரும் யுத்தமாக இன்று மாறியிருக்கிறது.

நிலம் மட்டுமன்றி, நிலத்துடன் சேர்த்து எமது வாழ்வும் அடையாளமும் வரலாறும் சேர்த்தே அழிக்கப்படுகிறது. இதுவொரு பெரும் மிகப்பெரும் மனித உரிமை மீறல் ஆகும். அரசாங்கங்கள் மேற்கொண்ட இந்த இந்த மனித உரிமை மீறல்களே தமிழ் மக்கள் தமது நிலத்தையும் வாழ்வையும் அடையாளத்தையும் பாதுகாப்பதற்காக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு ஒரு பெரும் இனவழிப்புடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதிலும் எமக்கு எதிரான நில ஆக்கிரமிப்பு யுத்தம் இன்னமும் நிற்கவில்லை. மாறாக, மேலும் தீவிரம் அடைந்துள்ளது. எமது மக்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவம், வடக்கு கிழக்கில் தற்போது எமது நிலங்களை ஆக்கிரமித்துள்ளது. அபிவிருத்தி, தொல்பொருள் ஆய்வு, காடுகள் ஒதுக்கீடு, வன விலங்குகள் சரணாலயம், பறவைகள் சரணாலயம் என்ற போர்வைகளில் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் , வனவிலங்குகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, காட்டிலாகா, வீடமைப்பு அதிகாரசபை ஆகிய திணைக்களங்கள் உட்பட பல்வேறு அரச திணைக்களங்கள் எமக்கு எதிரான இந்த நில ஆக்கிரமிப்பு யுத்தத்தில் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளன.

இதனை அண்மையில் அமெரிக்காவின் ஒக்லாந்து நிறுவனம் வெளியிட்ட முடிவற்ற போர் என்ற ஆய்வு அறிக்கையில் ஆதாரங்களுடன் வெளியிட்டது.

இலங்கையில் நடைபெறும் நில ஆக்கிரமிப்பு பற்றி ஆராய்ச்சி செய்த இஸ்ரேலிய அறிஞரான ஓரன் யிட்சப்சேல் என்பவர் இலங்கையை இனநாயக நாடு என்று விபரித்திருக்கிறார். தனி ஒரு இனத்தின் மேலாதிக்கத்தை நாடு முழுவதும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயற்படும் அரசுகளை இனநாயக நாடு என்று அவர் விளக்கம் அளிக்கிறார்.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது முதல் மிகவும் நுட்பமான முறையில் ஒரு இன நாயக நாடாக கட்டமைக்கப்பட்டுவருகின்றது. இலங்கையின் இத்தகைய இனநாயக கட்டமைப்பே இந்த நாட்டில் ஸ்திரமற்ற தன்மைஇ இன முரண்பாடுகள்இ ஆயுத யுத்தம் மற்றும் மனித உரிமைகள் மீறல்களுக்கு காரணமாக இருந்து வருகின்றது. ஆகவே இந்த உண்மையை புரிந்துகொள்ளாமல் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சமாதான முயற்சிகளோ,பொறுப்புக்கூறல் முயற்சிகளோ அல்லது நீதிக்கான முயற்சிகளோ வெற்றி அளிக்கப்போவதில்லை.

இதனை சர்வதேச சமூகம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படாமல் சமாதானத்தை அடைய முடியாது. அதேபோல, மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் சமாதானம் அவசியம். இந்த இரண்டும் ஒன்றோடு ஒன்று சார்ந்துள்ளன. நில உரிமைகள் மிக முக்கியமான மனித உரிமைகள் ஆகும். ஒரு இனத்தின் அடையாளம், வாழ்வு, செழிப்பு ஆகியவற்றின் உயிர் மூலமாக இருப்பது அந்த இனத்தின் பாரம்பரிய நிலம்.

வடக்கும் -கிழக்கும் எமது பாரம்பரிய பிரதேசங்கள். வடக்கும் -கிழக்கும் எமது தாயகம். எமது இந்த தாயக நிலம் எம்மிடம் இருந்து அபகரிக்கப்படுவது என்பது எமது இனம் அழிக்கப்படுவதற்கு சமனானது. ஆகவேதான் நில அபகரிப்பு ஒரு இனப்படுகொலை ஆகின்றது.

அதனால் தான், எமது பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கையும் -கிழக்கையும் பாதுகாக்கும் வழிமுறைகளை, சவால்களை ஆராய்வதற்காக 'தமிழர் தாயகத்தை இழத்தல்' என்ற தலைப்பில் இன்றைய இந்த சர்வதேச மாநாட்டை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்த மாநாடு ஒரு ஆரம்பம். எமது நிலத்தை நாம் பாதுகாப்பதற்கு சர்வதேச மட்டத்திலும், உள்ளூர் மட்டத்திலும் நாம் மேற்கொள்ளக்கூடிய வழிவகைகளையும், உபாயங்களையும் வகுத்து செயற்படும் பொருட்டு தொடர்ச்சியாக பல நிகழ்வுகள் நடைபெறும்.

எமது இந்த நிலமீட்புபோராட்டத்துக்கு சர்வதேச சமூகம் எல்லாவகையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பதில் வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்! ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கஜேந்திரகுமார் உரை!!

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்! ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கஜேந்திரகுமார் - உரை!! ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத்தொடரில் விடயம் 08 இன் கீழான வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான திட்டமிடல் பற்றிய பொது விவாத்தில் இணையவழியில் கலந்து கொண்டு திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அவர்கள் இல்.ஆற்றிய உரையின் விபரம் வருமாறு.

அவைத்தலைவர் அவர்களே,
தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து இந்த விடயத்தை நான் இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

ஒரு மக்கள் கூட்டம் தமது வாழ்வின் பிரிக்க முடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையை பெற்றிட நியாயமான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள உரித்துடையவர்கள் என வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான செயல்திட்டம் (VDPA) வெளிப்படுத்துகிறது.

சிறிலங்கா அரசால் இழைக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் மத்தியில், தமிழ்த் தேசமானது தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்காக போராடி வருகிறது . சிறிலங்கா அரசானது வன்முறையை கட்டவிழ்த்தபோது, அதிலிருந்து தம்மை பாதுகாக்கவே தமிழர்களும் ஆயுதவழி போராட்டத்தை கையிலெடுக்க நேர்ந்தது.

2002 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இரண்டு தரப்பினருக்கும் போர்முனையில் ஏற்பட்ட படைவலுச்சமநிலையே, இதற்கு அடிப்படை காரணமாகும்.

தமிழர் தாயகத்தின் ஏறக்காழ 75 வீதமான நிலப்பரப்பானது தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளும் ஆளுகைக்குள்ளும் இருந்த அப்போதைய களநிலை யதார்த்தத்தின் அடிப்படையில், ஈழத் தமிழரின் தேச அந்தஸ்தும் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்பட்டு , ஆகக் குறைந்தது இந்த அரசின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு ஒரு சமஷ்டி ஆட்சி முறைமை உருவாகுமென்றே எதிர்பார்க்கப்பட்டது.

இதன் மூலமாக ஈற்றில் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை




அனுபவிக்கக்கூடிய ஏதுநிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் நடை முறையில் நிகழ்த்தப்பட்டதோ முற்றிலும் வேறுபட்ட ஒரு நிகழ்வே. இந்த அரசானது, சர்வதேசத்தின் பல்வேறு தரப்புகளின் ஆதரவுடன், இராணுவ நடவடிக்கையையே தமது தீர்வாக முன்வைத்தது.

அந்த இராணுவ நடவடிக்கையினுடைய விளைவுகளே, சிறிலங்கா அரசு தமிழர்கள் மீது இனப்படுகொலையை மேற்கொண்டது என்ற குற்றச்சாட்டை தமிழர்கள் முன்வைக்கும் நிலையை உருவாக்கியது.

ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையும், சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளை அங்கீகரிக்காமல் பேச்சளவில் மட்டும் கை யாளும் வரை சுயநிர்ணய உரிமைக்காக போராடுகின்ற அனைத்து மக்களும், தொடர்ந்தும் பாதிக்கப்படுபவர்களாகவே இருப்பார்கள் என்பதை இங்கு வெளிப்படுத்திக்கொள்கிறேன்.



# பிராந்தியச் செய்திகள்



## யாழில் குடும்ப மோதலை விசாரிக்கச் சென்ற பொலிஸார் மீது சிலர் தாக்குதல்!

யாழ்ப்பாணம் திருநகர் பகுதியில் குடும்ப உறவினர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு குறித்து விசாரிப்பதற்காகச் சென்றிருந்த யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் சார்ஜன்ட் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், தாக்குதல் மேற்கொண்டவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

திருநகர் பகுதியில் நேற்றிரவு குடும்ப உறுப்பினர்களுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு மோதல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, 119 அவசர பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதற்கமைய, சம்பவத்தைவிசாரிக்கச்சென்றிருந்தபொலிஸ்சார்ஜன்ட்மீதேசகோதரர்கள்இருவர் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அப்பகுதிக்கு மேலதிக பொலிஸார் சென்றிருந்ததுடன் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.





## வவுனியாவில் வாள்வெட்டு - இரு பெண்கள் படுகாயம்: கணவன் தலைமறைவு!

வவுனியாவில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் அன்று (சனிக்கிழமை) இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த தாயும் மகளும் வீட்டில் இருந்த நிலையில், கணவனால் வாள்வெட்டு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த அவர்கள் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வாள்வெட்டில் ஈடுபட்ட நபர் தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள வவுனியா பொலிஸார், இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வடக்கில் இராணுவச் சோதனை சாவடிகளை நிரந்தரமாக்க முயற்சி!



வவுனியா-ஓமந்தையில்கொரோனா அச்சுறுத்தல்காலப்பகுதியில், தற்காலிகமாக அமைக்கப்பட்ட இராணுவசோதனைச் சாவடியைநிரந்தரமாக்கும்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக அப்பிரதேச மக்கள் மேலும் கூறியுள்ளதாவது, 'நாட்டில் கடந்த வருடம், கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்து காணப்பட்டமையினால், ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்த காலப்பகுதியில் மக்களை கண்காணிப்பதற்காக வவுனியாவில் ஓமந்தை உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில், தற்காலிக இராணுவ சோதனைசாவடிகள் அமைக்கப்பட்டன. நாட்டில் ஊடரங்கு தளர்த்தப்பட்டு வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்க அனைத்து மக்களும் தற்போது ஆரம்பித்து விட்டனர்.

இந்நிலையில் வவுனியா- ஓமந்தையில் அமைக்கப்பட்ட சோதனை சாவடியை நிரந்தரமாக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். அதாவது குறித்த ஓமந்தை வீதிக்கு அருகிலுள்ள கரையில், சீமெந்திலான தளம் அமைக்கப்பட்டு, இரண்டு நிரந்தர கொட்டகைகள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர்' என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கல்முனை – காரைதீவு கடற்கரை வீதி கார்பட் வீதியாக புனரமைப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கத்திற்கமைய நாட்டில் ஒரு இலட்சம் கிலோ மீட்டர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்ட கல்முனை தொடக்கம் காரைதீவு வரையான கடற்கரை வீதி காபட் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான வேலைத்திட்டத்தின் ஆரம்பக்கட்ட அடிக்கல் நடும் நிகழ்வு ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை தொகுதி முக்கியஸ்தகரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை பணிப்பாளர் சபை உறுப்பினரும், வன ஜீவராசிகள் இராஜங்க அமைச்சர் விமல வீர திஸ்ஸாநாயக்கவின் இணைப்பாளர் றிஸ்லி முஸ்தபாவின் தலைமையில் அன்று (21) ஞாயிற்றுக்கிமை இடம்பெற்றது.

அத்துடன் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவின் வழிகாட்டலில் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரதேச செயலகத்திற்கு ஒரு மைதான அபிவிருத்தி எனும் வேலைத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது கடற்கரை பௌஸி மைதானத்திற்கான கரப்பந்தாட்ட மைதானத்தை அபிவிருத்தி செய்ய இதன் போது அடிக்கல் நடப்பட்டது.

இந்த ஆரம்ப நாள் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் டி .எம் , வீரசிங்க பிரதம அதிதியாகவும் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் திலக்ராஜபக்ஷ கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டதுடன் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிரில், காரைதீவு பிரதேச சபை பிரதி தவிசாளர் ஏ.எம். ஜாஹிர், நாவிதன்வெளி பிரதேச சபை உதவி தவிசாளர் ஏ.ஏ. சமட், வீதி அபிவிருத்தி அதிகார சபை உயரதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டீ. வீரசிங்கவின் இணைப்பாளர் ஜௌபர் மற்றும் பொது ஜன பெரமுன முக்கியஸ்தர்கள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள், விளையாட்டுக் கழக வீரர்கள், நிர்வாகிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## தீவிரவாதத்தை ஊக்குவித்தார் என்ற சந்தேகத்தில் நபர் ஒருவர் கைது

தீவிரவாதத்தை ஊக்குவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

44 வயது சந்தேகநபர் ஒருவர் மாவனல்லையில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட நபர் மத்தியகிழக்கிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் என தெரிவித்துள்ள பொலிஸார் ஜஹ்ரான் ஹாசிமின் உறவினர்களுடன் கைதுசெய்யப்பட்டவருக்கு தொடர்புள்ளதாக தெரிவித்துள்ளனர்.






## சீரியலில் நடிக்க வரும் நடிகை அமலா பால்

மைனா, தலைவா, வேலையில்லா பட்டதாரி படங்கள் மூலம் ரசிகர்களை கவர்ந்தவர் நடிகை அமலா பால். ஆனால் முன்பு போல் தற்போது நடிகை அமலா பாலுக்கு தமிழில் பெரிதும் பட வாய்ப்புகள் இல்லாத காரணத்தினால் தெலுங்கு, மலையாளம் என வேறு மொழிகளில் நடித்து வருகிறார்.

மேலும் சமீபத்தில் தெலுங்கில் வெளியான Pitta Kathalu வெப் சீரிஸ் ஒன்றில் நடித்திருந்தார்.

இந்நிலையில் நடிகை அமலா பால் விரைவில் சீரியலில் நடிக்க போவதாக தகவல் சில தரப்பில் கூறப்படுகிறது.

இந்த தகவலை அறிந்த ரசிகர்கள் பலரும், விஜய், தனுஷுடன் இணைந்து கதாநாயகியாக நடித்த அமலா பாலுக்கு இந்த நிலைமை என புலம்பி வருகின்றனர்.



## ஹிட் சீரியலை நிறுத்தகூறும் ரசிகர்கள்



சீரியல்கள் தான் இப்போது வீட்டில் இருக்கும் பெண்களின் பொழுதுபோக்காக உள்ளது.

எல்லா தொலைக்காட்சிகளிலும் மக்கள் எதுபோன்ற சீரியல்களை பார்க்கிறார்கள் என்பதை புரிந்துகொண்டு ஒளிபரப்புகிறார்கள்.

TRPயிலும் சீரியல்களின் சண்டை அதிகமாக உள்ளது. ஜீ தமிழில் ஒளிபரப்பாகும் பல சீரியல்களுக்கு மக்கள் அடிமை. அந்த லிஸ்டில் யாரடி நீ மோகினி சீரியலும் உண்டு. அண்மையில் இந்த சீரியலின் வில்லி ஸ்வேதா இறந்ததாக காட்டப்பட்டது.

முக்கிய கதாபாத்திரம் என்பதால் சீரியல் முடிந்துவிடும் என ரசிகர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் ரசிகர்கள் எதிர்பார்க்காத வண்ணமாக இறந்துவிட்டதாக காண்பிக்கப்பட்ட ஸ்வேதா மீண்டும் உயிருடன் வந்துவிட்டார்.

இதைப்பார்த்த ரசிகர்கள் லாஜிக்கே இல்லாமல் உள்ளது, தயவுசெய்து சீரியலை நிறுத்துங்கள் என லேட்டஸ்ட்டாக வந்து இந்த சீரியல் புரோமோ கீழ் ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகிறார்கள்.

## 'சியான் 60' படத்தில் இணைந்த பேட்ட நடிகர்

விக்ரம், துருவ் விக்ரம் முதன்முறையாக இணைந்து நடிக்கும் 'சியான் 60' படத்தை கார்த்திக் சுப்புராஜ் இயக்கி வருகிறார்.

கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் உருவாகும் படம் 'சியான் 60'. இப்படத்தில் விக்ரமும், அவரது மகன் துருவ் விக்ரம் முதன்முறையாக இணைந்து நடிக்கின்றனர். 7 ஸ்கிரீன் ஸ்டுடியோ நிறுவனம் மூலம் லலித்குமார் இந்தப் படத்தையும் தயாரிக்கிறார். கேங்ஸ்டர் கதையம்சம் கொண்ட இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார்.

மேலும் இப்படத்தில் சிம்ரன், வாணி போஜன், பாபி சிம்ஹா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். 'சியான் 60' படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இப்படத்தில் இளம் நடிகர் சனத் இணைந்துள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இவர் ஏற்கனவே கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய பேட்ட, மெர்குரி போன்ற படங்களில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## அமீர்கான் படத்தில் விஜய் சேதுபதிக்கு பதிலாக நடிக்கப்போவது யார் தெரியுமா?

அமீர்கான் நடிப்பில் உருவாகும் 'லால் சிங் சட்டா' திரைப்படத்தில் பிரபல நடிகர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளாராம்.

ஹாலிவுட்டில் பிரபலமான திரைப்படம் 'பாரஸ்ட் கம்ப்'. இந்த படம் தற்போது இந்தியில் ரீமேக் செய்யப்பட்டு வருகிறது. 'லால் சிங் சட்டா' என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில் அமீர் கான் நாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக கரீனா கபூர் நடிக்கிறார். மேலும் இதில் அமீர் கானின் நண்பராக நடிக்க ஒப்பந்தமான விஜய் சேதுபதி, பின்னர் கால்ஷீட் பிரச்சனை காரணமாக அப்படத்தில் இருந்து விலகினார்.

இந்நிலையில், அக்கதாபாத்திரத்தில் நடிக்கப்போவது யார் என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி பிரபல தெலுங்கு நடிகரும், நடிகை சமந்தாவின் கணவருமான நாகசைதன்யா தான் அந்த கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. இந்தப் படத்தில் அமீர்கான், நாகசைதன்யா இருவருமே ராணுவ வீரர்களாக நடிக்க உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



தொகுப்பு :– ஹாசினி




# எண்ணெய் பசை சருமத்திற்கு முல்தானி மெட்டி !!

முல்தானி மெட்டி குறித்து நம்மில் பலரும் கேள்வி பட்டிருப்போம். முக அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பலருடைய விருப்ப தேர்வாக முல்தானி மெட்டி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சருமத்தில் எண்ணெய் வடியும் பிரச்சனை உள்ளவர்களுக்கு முல்தானி மெட்டி சரியான ஒரு தீர்வு. முல்தானி மெட்டியை எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள் பயன்படுத்தும் போது சருமத்தில் உள்ள துளைகளையும் அழுக்குகளையும் நீக்கி சருமத்தை சுத்தப்படுத்தி எண்ணெய் வடியும் பிரச்சனைகளுக்கு முற்று புள்ளி வைக்கிறது.



முல்தானி மெட்டியை தண்ணீரில் குழைத்தோ அல்லது சந்தனம், ரோஸ் வாட்டர் போன்றவற்றுடன் கலந்தோ முகத்தில் ஃபேஸ் பேக்காக போடலாம். வாரத்தில் இரண்டு முறையோ அல்லது மூன்று முறையோ செய்து வரும்போது முகத்தில் உள்ள எண்ணெய்பசை வடியும் பிரச்சனை குறையும்.

முகத்தில் பருக்களால் ஏற்படும் தழும்புகள் மற்றும் வடுக்களை நீக்கும் தன்மை முல்தானி மெட்டிக்கு உண்டு. எனவே, முகம் முழுக்கவோ அல்லது பருக்கள் மற்றும் அதனால் ஏற்படும் தழும்புகள் இருக்கும் இடத்திலோ முல்தானி மெட்டியை அடிக்கடி வைக்கும் போது அதற்கான பலனை எதிர்பார்க்கலாம்.

முல்தானி மெட்டி பொடியை தயிருடன் கலந்து முகத்தில் ஃபேஸ் பேக் போல பயன்படுத்தலாம் இல்லையெனில் முல்தானி மெட்டியுடன் புதினா பொடியை கலந்து பயன்படுத்தும் போது சருமத்திற்கு நல்ல பொலிவை தரும்.

முல்தானி மெட்டி கருவளையத்திற்கும் நல்ல ஒரு தீர்வாக பயன்படுகிறது. முல்தானி மெட்டியுடன் உருளைக்கிழங்கு மற்றும் எலுமிச்சை சாறு கலந்து கண்களுக்கு அடியில் தடவி வரும் போது கருவளையம் விரைவில் மறைந்து பளிச் சருமத்தை தரும்.

முல்தானி மெட்டியுடன் முட்டை, நெல்லிக்காய், எலுமிச்சை சாறு இவற்றுடன் பீர் கலந்து தலையில் தடவி இருபது நிமிடம் கழித்து குளித்து வரலாம். இதனால் முடிகள் ஆரோக்கியமாகவும் பளபளப்பாகவும் இருப்பதோடு முடி உதிர்தல் பிரச்சனைகளையும் சரி செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதங்களுக்கு எண்ணெய் மசாஜ் செய்வதால் என்ன பயன்கள் ?

ஒருவர் தினமும் இரவில் படுக்கும் முன் பாதங்களுக்கு மசாஜ் செய்வதன் மூலம், பாதங்களுடன் நேரடி தொடர்புடைய பல்வேறு உடலுறுப்புக்களில் உள்ள பிரச்சனைகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும்.

பாதங்களில் ஒருவர் தினமும் மசாஜ் செய்து வந்தால், அதனால் மன அழுத்தம் குறையும், உடல் ரிலாக்ஸ் அடையும், உடலில் இரத்த ஓட்டம் தூண்டப்படும், தூக்க பிரச்சனைகள் தடுக்கப்படும், செரிமான பிரச்சனைகள் விலகும் மற்றும் சரும ஆரோக்கியம் மேம்படும்.

முக்கியமாக கர்ப்பிணிகள் இரவில் படுக்கும் போது பாத மசாஜ் செய்து வந்தால், உடலில் நீர்த்தேக்கத்தில் ஏற்படும் கால் வீக்கத்தைத் தடுக்க முடியும். உதாரணமாக, காலின் பெருவிரலோடு மூளை மற்றும் நுரையீரல் நேரடி தொடர்புக் கொண்டுள்ளது.

பெருவிரலில் மசாஜ் செய்தால் மூளை மற்றும் நுரையீரல் பிரச்சனைகள் தடுக்கப்படும். காலின் இரண்டாம், மூன்றாம், நான்காம் விரல்களில் கொடுக்கப்படும் அழுத்தம் பல் வலிக்கு உடனடி நிவாரணம் தரும். கடைசி சிறு விரல் காது வலியைக் குறைக்கும்.

தினமும் இரவில் படுக்கும் முன் சிறிது நேரம் பாதங்களை மசாஜ் செய்து விட்டு உறங்குங்கள். இதனால் உங்களுக்கு தெரியாமலேயே பல நன்மைகளை நீங்கள் பெறுவீர்கள்.

நம் உடலின் ஒவ்வொரு பகுதிகளும் முக்கியத்துவம் கொண்டுள்ளது. அந்த வகையில் பாதங்களும் முக்கியதுவத்தை பெற்றுள்ளது. பாதங்களுக்கு நாம் தினமும் எண்ணெய் மசாஜ் செய்வதினால் நம் உடலில் ஏராளமான நன்மைகள் நிகழும்.



# முடி வளர்ச்சிக்கு தேவையான சத்துக்கள் என்ன...?

பொதுவாகவே புரோட்டீன் பற்றாக்குறை, வைட்டமின் ஏ, வைட்டமின் பி, வைட்டமின் சி, சத்துக்கள் தேவையான அளவு உடலில் இல்லை என்றால் முடியின் வளர்ச்சி தடைபடுகிறது.

காலை எழுந்தவுடன் பல் தேய்த்துவிட்டு 1 டம்ளர் அளவு தண்ணீரைக் குடிப்பது உடல் ஆரோக்கியத்திற்கும், முடி வளர்ச்சிக்கு மிகவும் நல்லது. டீ காபிக்கு பதிலாக சத்துமாவு கஞ்சியைக் குடிக்கலாம். காலை இட்லி தோசைக்கு பதிலாக கம்பு மாவு, கேழ்வரகு மாவு, வரகு, தினை இப்படிப்பட்ட சிறு தானியங்கள் சேர்க்கப்பட்ட உணவை எடுத்துக்கொள்வது மிகவும் நல்லது.

**தேவையான பொருட்கள்:**

**பாதாம் பருப்பு – 4,**
**ஆளி விதைகள் – 1 டேபிள்ஸ்பூன்,**
**நெல்லிக்காய் – 1,**
**பேரிச்சம் பழம் – 2,**
**சிறிய கேரட் – 1**

இதில் பாதாம் பருப்பையும், ஆளி விதைகளையும் ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு.முந்தைய நாள் இரவே ஊறவைத்துக் கொள்ளவேண்டும். மறுநாள் காலை ஒரு மிக்ஸி ஜாரை எடுத்து ஊறவைத்த பாதாம் பருப்புகளையும், ஆளி விதைகளையும் தண்ணீரோடு மிக்ஸி ஜாரில் சேர்த்துக் கொள்ளுங்கள். அதன்பின்பு பேரிச்சம்பழம் நெல்லிக்காயில் உள்ள கொட்டை மட்டும் நீக்கிவிட வேண்டும்.

கரட்டை சிறு சிறு துண்டுகளாக வெட்டி சேர்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் விட்டோ அல்லது பால் விட்டோ, இந்த ஜூஸை அரைத்து, வடிகட்ட கூடாது. அப்படியே குடித்து விடவேண்டும். தேவைப்பட்டால் நாட்டு சர்க்கரை அல்லது தேன் சேர்த்து கலந்து இதை குடிப்பது முடி வளர்ச்சிக்கு மிகவும் நல்லது.

இந்த ஜூஸில் சேர்க்கப்பட்டிருக்கும் ஆளிவிதையில் ஒமேகா-3 சத்து அதிகமாக உள்ளது. முடி வளர்ச்சிக்கு அவசியமாக தேவைப்படும் இந்த சத்து கொண்ட ஆளி விதைகளை தினமும் மேல் சொன்ன ஜூஸில் தான் கலந்து சாப்பிட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. விருப்பம்போல் தயாரித்துக்கொள்ளலாம்.

**தொகுப்பு :– ஹாசினி**



# விவேகானந்தரின் பொன்மொழிகள்

கடவுள் இருந்தால் அவனை நாம் காணவேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.

உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளை காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.

செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின் கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாய்த்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைதனம்.

இளைஞர்களே, உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால், என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.

பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.

பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

இந்தியாவை முன்னேற்றமடையச் செய்ய விரும்பினால், பாமர மக்களுக்காக நாம் வேலை செய்தாக வேண்டும்.

அடிமைகள் எல்லோருக்கும் பெரிய சனியனாக இருப்பது பொறாமையே ஆகும்.
நமது நாட்டைப் பிடித்த சனியனும் அதுதான்.ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவில்லாதவர்கள் ஆகிய இவர்களே உன்னுடைய தெய்வங்களாக விளங்கட்டும்.

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

உண்மைக்காக எதையும் துறக்கலாம் ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.

வலிமையே மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமான, அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.

வீரர்களே, கனவுகளிலிருந்து விழித்தெழுங்கள்! தளைகளிலிருந்து விடுபடுங்கள்!

இளைஞனே, வலிமை, அளவற்ற வலிமை - இதுவே இப்போது தேவை. சிறந்த லட்சியத்துடன் முறையான வழியைப் பின்பற்றித் தைரியத்துடன் வீரனாக விளங்கு!

உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.

நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக ரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன் மற்றவர்கள் துராத்மாக்களே.

எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள். கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.

சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.

நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்!

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும்.

**5ஆம் பக்க தொடர்ச்சி...**

2006ம் ஆண்டு நான்காம் கட்ட ஈழ யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து. இந்த வெள்ளைவான் கடத்தல்கள் யாழ்குடாவில் ஆரம்பமாகியிருந்தன. யாழ் குடா முழுவதும் சகட்டுமேனிக்கு இடம்பெற்ற இந்த வெள்ளை வான் கடத்தல்களினால் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கடத்தப்பட்டு. காணாமல் போயிருந்தார்கள்.

ஈழ யுத்த்கள் முடிவடைந்து சமாதானம் உருவாகும் என்று அனைவரும் அசுவாசப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் கூட. வெள்ளை வான் கடத்தல்களுடன் இணைந்து கறுப்பு வான் கடத்தல்கள் என்கின்ற ஒரு பயங்கரம் ஆரம்பமாகி. தமிழ் மக்களை அச்சத்திற்குள் ஆழ்த்தி வருகின்றது.

இந்த வான்களில் கடத்தப்படுபவர்களுக்கு என்ன நடக்கின்றது என்கின்ற விடயம் ஒரு பெரிய மர்மமாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது

## படித்ததில் பிடித்தது..

ஆற்றங்கரை ஓரமாக வந்துகொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவனுக்கு வைரக்கல் ஒன்று கண்ணில் பட்டது.. அது வைரம் என்றறியாமல், விலை போகுமா என்ற சந்தேகத்துடன் கடைத்தெருவுக்கு எடுத்து வந்தான்.. அவன் கையில் வைரம் இருப்பதைப் பார்த்த வியாபாரி ஒருவன், இருபது ரூபாய்க்கு தன்னிடம் அதை விற்குமாறு கேட்டான்.. ஆனால் வழிபோக்கனோ பேரம் பேசித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன் 25 ரூபாய் கேட்டான்..

ஐந்து ரூபாய் அதிகம் கொடுக்க விரும்பாத அந்த வியாபாரியும் 20 ரூபாய்க்கு பேரம் பேசினான்.. இதைக் கவனித்த மற்றொரு வியாபாரி 25 ரூபாய் கொடுத்து அந்த வைரத்தை வாங்கிக்கொண்டு சென்றான்.. ஆத்திரமடைந்த வியாபாரி, அந்த வழிப்போக்கனை பார்த்து, "அட முட்டாளே! அதன் மதிப்பு பல ஆயிரம் பெறும்... அறிவில்லாமல் விற்றுவிட்டாயே!" என்று திட்டினான்..

அதற்கு அவன், "அந்தக் கல்லுக்கு என்னுடைய மதிப்பு அவ்வளவுதான்.. ஆனால் அது வைரம், அதன் மதிப்பு தெரிந்தும் அதைத் தவறவிட்ட நீ தான் மிகப்பெரிய முட்டாள்" என்றான்..

சிலர் இப்படித்தான் உண்மையான மதிப்பு தெரிந்தும்,
கிடைத்ததை விட்டுவிட்டுத் தவிக்கிறார்கள்.

**கடந்தவாரத்தில்(2021.03.14) இடம்பெற்ற நேர்காணலின் தொடர் வருகின்ற வார இணைய பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்**

# யார் இவர்கள் ?

அன்றைய இரவின் சுதாகர் கண்கள் நித்திரையை ஒருகணமும் பரசவிப்பதாய் இல்லை ஏன் அந்த நித்திரையற்ற இரவுகள் ஆம் நாளைய விடியலின் புறப்பாடு பற்றிய ஏக்கமும் எடுத்த கடமையை செவ்வனே செய்து முடித்துவிட வேண்டும் என்ற பதற்றமும் தான் இத்தனை காலம் வாழ்ந்த தேசத்தை நண்பர்களை எனப் பிரிந்து தனக்கான கடமையை நிறைவேற்றப் போகப்போகின்ற அந்தப் பயணம் அவன் ஆழ்மனதைப் போட்டுக்கிளறிக்கொண்டே இருந்தது

அன்றைய போர்ச்சூழலில் கொழும்பு செல்வது அவ்வளவு எளிதான காரியம் ஒன்றல்ல இராணுவத்திடம் அனுமதி (பாஸ்) பெறவேண்டும் அனுமதி பெற்றாலும் இளம் வயது நபர் அதுவும் ஒரு போராளி தனியாக இராணுவ சோதனைச்சாவடிகளை கடப்பதென்பது குதிரைக்கொம்பு போன்றதான ஒன்றாகவே இருக்க இதற்கான திட்டங்களும் தயார்ப்படுத்தப்பட்டே இருந்தது ஓர் வயோதிப தம்பதியினருடன் அவர்கள் பிள்ளைகளில் ஒருவனாக சுதாகர் அடையாளம் மாற்றப்பட்டுக் கடப்பதாக அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தது

அந்த நித்திரையற்ற பொழுதும் புலரவே அவன் கொழும்பு நோக்கி புறப்படத்தயாராகிக்காத்திருக்க அவன் தங்கியிருந்த இடம் நோக்கி வெள்ளை நிற வாகனம் ஒன்று வந்து நின்றது அதிலிருந்து இறங்கிய பொறுப்பாளர்கள் பயணம் பற்றிய பூரண தெளிவூட்டலை அவனுக்கு வழங்கிய பின்னர் அதே வாகனத்தில் ஓமந்தை எல்லைக்காவலரன் நோக்கிப் புறப்பட்டார்கள் போகும் வழியில் அந்த வயோதிபத்தம்பதியினரும் ஏறிக்கொள்ள வாகனம் ஓமந்த நோக்கிப் புறப்பட்டு காவலரனை அடைந்தும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளாய் செல்வதற்கு நீண்ட ஒரு செம்மண் பாதையைக் கடந்து சோதனைச்சாவடியை அடைந்ததும் இராணுவத்தால் உடைமைகள் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு நீண்ட விசாரணைகளுக்குப் பின்னராக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளாய் அனுமதிக்கப்பட்டார்கள் பின்னர் வவுனியாவை வந்தடைந்து அங்கிருந்து கொழும்பிற்கு அனுப்பப்பட்டான் அங்கு கடை ஒன்றில் வேலை செய்வது போன்ற தோற்றத்தில் தான் வந்த வேலையையும் யாருக்கும் சந்தேகம் வராதவண்ணமாய் தொடர்ந்து கொண்டிருந்த அவன் ஒரு புலனாய்வுத்துறை போராளி மிக முக்கியமான இலக்கு ஒன்றைப்பற்றிய தகவல்களைத் திரட்டும் நோக்கோடு சுதாகர் அனுப்பப்பட்டிருந்தான்

அங்கு அவன் வேலை செய்யும் அதே இடத்தில்தான் கிறிஸ்ரினாவும் பணியாற்றி வந்தாள் அவர்களுக்குள்ளாய் நட்புமலரவே ஆரம்பத்தில் தன்மீது சந்தேகம் வராமல் இருப்பதற்கானஓர் உத்தியாக அவள்நட்பை பயன்படுத்திக்கொண்ட சுதாகருக்குக் காலப்போக்கில் அவளுடனான நாட்களில் அவர்களுக்குள்ளான உரையாடல்களூடாய் அவள் எமது நாட்டின் மீதும் விடுதலைப்போராட்டத்தின் மீதும் கொண்டுள்ள பற்றுதல் வெளிப்படவே தன்னை யார் என்பதை அவளிடம் வெளிப்படுத்தமுடியாத சுதாகர் நெஞ்சமதில் அவள் மீதான ஈர்ப்பு காதலாக மலரவும் அதைப் பெரிதாய் பொருட்படுத்தாமல் தான் வந்த நோக்கமதில் கவனத்தைச் செலுத்தி தகவல்களை திரட்டுவதனூடாக தாக்குதலுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வந்தான்

இதற்கிடையில் அவளோடு நேரங்களைச்செலவிடுவதும் அதே நேரத்தில் தாக்குதலுக்கான வேவுகளைப் பார்ப்பதுமாய் காலங்கள் ஓடிக்கொண்டே இருக்க இருவருக்கும் இடையிலான நெருக்கமும் அதிகரிக்கவே காதல் கல்லையும் கரைக்கும் பேர் ஆயுதமல்லவா சுதாகர் மனதையும் அது சற்றேகரைத்துவிட ஒரு கட்டத்தில்

தன் காதலை கிறிஸ்ரினாவிடம் மனம்திறந்து வெளிப்படுத்தியிருந்தான் சுதாகர் அவன் மீது அவளுக்கும் ஈர்ப்பு இருக்கவே ஆனாலும் ஏதோ ஒன்று அவளை சுதாகரின் காதலை ஏற்கவிடாமல் தடுக்க அவனுக்குப் பதிலெதுவும் கூறாமல் சென்றவள் ...

அதன் பிறகு அவனை சந்திக்காமல் தவிர்த்து வந்தாள் அவள் வேலைக்கு வருவதை நிப்பாட்டி நாட்கள் சில ஓடின இருவருக்கும் இடையிலான நெருக்கம் குறைந்து போயிருக்கவே அவள் ஏன் எதற்காக தன்னிடம் இருந்து விலத்தி நடக்கிறாள் என்பது புரியாமல் அவளிடம் கேட்பதற்கு எத்தனையோ தடவைகள் எத்தனித்தும் அவளிடம் இருந்து மௌனமே பதிலாய் வந்த வண்ணம் இருந்தது

அதற்கு நடுவில் அந்த தாக்குதலுக்கான நாட்களும் நெருங்கவே அவனும் அவள் நினைவுகளிலிருந்து சற்றே விலத்தி இறுதி வேவு நடவடிக்கைகளுக்குள்ளாய் மூழ்கி தகவல்களைத் திரட்டி அனுப்பியபடியே காலங்கள் நகர ஒரு திங்கள் மாலைப்பொழுதில் தாக்குதலுக்கான நேரம் குறிக்கப்பட்டு அந்த தாக்குதலை மேற்கொள்ளப்போகும் போராளிக்கு களநிலவரங்களையும் தாக்குதலுக்கான வேவுத்தகவல்களையும் விளக்கித் தாக்குதலுக்குத் தயாராக்குமாறும் நாளைய தினம் மற்றைய போராளியைச் சந்திப்பதற்கான ஒழுங்குகள் பற்றிய விபரங்களும் சுதாகருக்கு அறிவிக்கப்பட்டது

அதற்கு ஏற்ப அவன் அனைத்து ஒழுங்குகளையும் தயார் செய்த நிலையில் தற்கொடை தாக்குதல் மேற்கொள்ளப்போகும் அந்த போராளியைச் சந்திப்பதற்காய் அவனது வீட்டில் காத்திருக்கவே நீல நிற முச்சக்கர வண்டி ஒன்று அவன் வீட்டு வாசலில் வந்து நின்றது

அதிலிருந்து கிறிஸ்ரினா இறங்கி அவனை நோக்கி வர இவள் எதற்காக இங்கு இப்பொழுது வருகிறாள் என்று ஏதுவுமாய் புரியாமல் அதுவும் அந்த போராளிக்காய் அவன் காத்திருக்கிறான் அந்த பேராளி வரும் நேரம் வேறு இவள் அந்த போராளியைப் பார்த்துவிடக்கூடாது என்னும் பதற்றத்தோடு அவளை நோக்கி விரைந்தவன் அவளை அங்கிருந்து அனுப்புவதிலேயே குறியாய் இருக்க அவளோ தான் உன்னைச் சந்திக்க வரவில்லை எனவும் தான் எழில் என்ற நபரைச் சந்திக்க வந்ததாகவும் கூற தன்னுடைய போராளிப்பெயரை கிறிஸ்ரினா கூறியதும் சுதாகருக்கு ஒரு நிமிடம் பிரபஞ்சம் அசைவின்றி நிற்க என்னடா சுதா என்ன நடந்த என்ட அவள் உழுப்ப நிதானத்துக்கு வந்தவன் நீ தமிழினியா என்றான் ....

தமிழினியா யார் அது என்ற கிறிஸ்ரினாவிடம் சங்கோத வார்த்தையை சுதாகர் சொன்னதும் பதிலுக்கு அவளும் கூறி முடித்து ஒரு கனம் திகைத்து நிலை பெற்றவள் ஆம் நான்தான் தமிழினி என தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட பொழுதுதான் சுதாகர் உணர்ந்து கொண்டான் தன் காதலை ஏன் அவள் ஏற்க மறுத்தாள் என்பதாய் ...

சில நிமிட மயான அமைதிக்குப்பின்னராய் தேசக்கடமைக்குள்ளாய் கட்டுப்பட்டவர்களாய் இருவரும் பணிக்குத் திரும்பினார்கள் அவன் அவளுக்கு அனைத்தையும் விளங்கப்படுத்தித் தாக்குதலுக்காய் தயார்ப்படுத்தினான் நாட்களும் நகர்ந்தோட சுதாகர் கிறிஸ்ரினாவாய் அறிமுகமானவர்கள் எழில் தமிழினியாய் விடைபெறும் அந்த நாளும் வந்தது

அன்றைய நாளின் விடியலில் தாக்குதலுக்கு தயாராகினாள் தமிழினி தான் மனதார நேசித்து மாங்கல்யம் சூடி திலகமிட எண்ணியவன் இன்றோ அதே மங்கைக்கு தற்கொடை அங்கி சூடி வெற்றித்திலகமிட்டு வழியனுப்பலானான் தேகக்காதலிலும் தேசக்காதலின் புனிதம் உணர்ந்தவர்களாய் அவளை இலக்கை நோக்கி அனுப்பிவிட்டு தன் கடமை முடித்தவனாய் எழில் மீண்டுமாய் வன்னி நோக்கி புறப்பட்டான்.

அங்கே பேரிடியாய் வெற்றி வாகை சூடினாள் அந்த முகமறியா வேங்கை ...




புவனேஸ்வரன் தர்சிகன்




## அப்பிள் பிரியர்களுக்கு மகிழ்ச்சி தகவல்! அமேசான் தளத்தில் சிறப்பு தள்ளுபடி

இந்தியாவில் முன்னணி ஒன்லைன் வர்த்தக நிறுவனமான அமேசான் அப்பிள் டேஸ் பெயரில் சிறப்பு சலுகை மற்றும் தள்ளுபடிகளை வழங்குகிறது.

இந்த அமேசானில் அப்பிள் டேஸ் விற்பனை மார்ச் 17 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இந்நிலையில் ஐபோன் 12 சீரிஸ், ஐபேட் மினி, மேக்புக் ப்ரோ என பல்வேறு சாதனங்களுக்கு அசத்தல் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

இதன்படி ஐபோன் 12 மினி மாடல் ரூ. 67100 துவக்க விலையில் கிடைக்கிறது. இது முந்தைய விலையை விட ரூ. 2800 குறைவு ஆகும். இத்துடன் தேர்வு செய்யப்பட்ட வங்கி கார்டுகளை பயன்படுத்தும் போது ரூ. 6 ஆயிரம் வரை கூடுதல் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மேலும் ஐபோன் 11 ப்ரோ விலை ரூ. 79,900 ஆகவும், ஐபேட் மாடல்களுக்கு ரூ. 9 ஆயிரம் வரையிலான சேமிப்பு, தேர்வு செய்யப்பட்ட வங்கி கார்டுகளை பயன்படுத்தும் போது ரூ. 3 ஆயிரம் வரை உடனடி தள்ளுபடிகளும் உள்ளன.

சிறப்பு தள்ளுபடி, கேஷ்பேக் தவிர, ஒவ்வொரு மாடலுக்கும் ஏற்ப வட்டியில்லா மாத தவணை முறை வசதியும் வழங்கப்படுகிறது.

இச்சிறப்பு தள்ளுப்படி அப்பிள் பிரியர்களுக்கு மகிழ்சியை தரக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கூகுள் நிறுவனத்தின் புதிய ஸ்மார்ட்போன் இந்த திகதியில் அறிமுகமாகும்..

கூகுள் நிறுவனத்தின் பட்ஜெட் ரக பிக்சல் 5V ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்யப்படும் திகதி தற்போது வெளியாகியுள்ளது. முந்தைய தகவல்களில் பிக்சல் பட்ஸ் இயர்போன் ஏப்ரல் மாதத்திலும், புதிய பிக்சல் போன் ஜுன் 11 ஆம் திகதி அறிமுகமாகும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதன்படி புதிய பிக்சல் போன் ஜுன் 11 ஆம் திகதி அறிமுகமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய ஸ்மார்ட்போன் தோற்றத்தில் இது பார்க்க பிக்சல் 4V போன்றே காட்சியளிக்கும் என்றும் கூகுள் பிக்சல் 5V மற்றும் பிக்சல் 6 மாடல்களில் சிறிய ஹோல்-பன்ச் வழங்கப்படும் என கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி பிக்சல் 6 மாடலில் செல்பி கேமரா ஸ்மார்ட்போனின் நடுவில் வழங்கப்பட்டு இருக்கும் என தெரிகிறது. அதன்படி பன்ச்-போல் முந்தைய மாடலை விட 10 பிக்சல் அளவு சிறியதாக இருக்கும் எனவும் பிக்சல் 5V பன்ச் ஹோல் 55 பிக்சல் அளவு கொண்டிருக்கும் என கூறப்பட்டுள்ளது.

மேலும் வெளியீடு தவிர புதிய பிக்சல் ஸ்மார்ட்போன் பற்றி எந்த தகவலும் தற்சமயம் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சம்சங் புதிய படைப்பு! பட்ஜெட் விலையில் அறிமுகமாகவுள்ள புதிய மெபைல்

சம்சங் நிறுவனம் சம்சங் கெலக்ஸி எம்12 ஸ்மார்ட்போனை அறிமுக செய்து இதன் விற்பனை மார்ச் 18 என அறிவித்துள்ளது.




இது சம்சங் கெலக்ஸி எம்11 ஸ்மார்ட்போன் பிளாக், புளு மற்றும் வைட் நிறங்களில் கிடைக்கிறது.

மேலும் சம்சங் கெலக்ஸி எம்11 4 ஜிபி+64 ஜிபி மெமரி மொடல் விலை ரூ. 10,999 ஆகவும் சம்சங் கெலக்ஸி எம்11 6 ஜிபி+ 128 ஜிபி மொடல் விலை ரூ. 13,499 ஆகேவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இது பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டுள்ளது. தற்போது அவை என்ன என்பதை பார்ப்போம்.

6.5 இன்ச் 720-1600 பிக்சல் HD+ இன்பினிட்டி வி டிஸ்ப்ளே
கார்னிங் கொரில்லா கிளாஸ்
எக்சைனோஸ் 850 ஆக்டாகோர் பிராசஸர்
மாலி-G52, ஆண்ட்ராய்டு 11 மற்றும் ஒன் AI 3.1
4 ஜிபி ரேம், 64 ஜிபி மெமரி, 6 ஜிபி ரேம், 128 ஜிபி மெமரி
டூயல் சிம் ஸ்லாட்
48 எம்பி பிரைமரி கமரா, f/2.0
8 எம்பி அல்ட்ரா வைடு கமரா, f/2.2
5 எம்பி டெப்த் கமரா
2 எம்பி மேக்ரோ கமரா, f/2.4
8 எம்பி செல்பி கமரா, f/2.2
பக்கவாட்டில் கைரேகை சென்சார்
6,000 எம்ஏஹெச் பேட்டரி
15 வட் பாஸ்ட் சார்ஜிங்

## அச்சிடப்படும் ஆடம்பர வீடுகள்!

வீடுகட்டுவதற்கு முப்பரிமாண அச்சுத்தொழில்நுட்பம்பயன்படுத்துவது கடந்த ஐந்து ஆண்டுகளாக நடக்கிறது. பரிசோதனைகளாகவே இந்த முயற்சிகள் இருந்தன, ஆனால், தற்போது ஆடம்பர வீடுகளைக் கட்டவும் முப்பரிமாண அச்சு உத்தியை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

அமெரிக்காவில் ஆஸ்டின் நகரில், ஐகான் என்ற முப்பரிமாண கட்டிட அச்சு இயந்திர நிறுவனம் உள்ளது. இது, சில கட்டுமான அமைப்புகளுடன் சேர்ந்து 1,000 முதல் 2 ஆயிரம் சதுர அடியில், தரைத் தளம் மற்றும் ஒரு மாடி உள்ள வீடுகளை கட்டித் தரத் தொடங்கிஉள்ளது.


இதில் தரைத்தளத்தை, ஐகான் நிறுவனம் தனது 'வல்கன்' என்ற முப்பரிமாண கட்டிட அச்சியந்திரத்தின் மூலம் ஒரு வாரத்திற்குள் அச்சிட்டுவிடுகிறது. அதன் பிறகு, முதல் மாடியை மரத்தால் ஆன கட்டுமானமாக உருவாக்குகின்றனர். இதுவும் விரைவிலேயே செய்து முடிக்கப்படுவதால், விரைவில், ஆடம்பர வீடு வேண்டுவோர், இத் திட்டத்தை விரும்புவர் என ஐகான் எதிர்பார்க்கிறது. சும்மா இல்லை. ஒரு வீடு ரூ.3.30 கோடி வரை விலை ஆகும்.






கணினித் துறை பாரம்பரியத்தை மதிப்பதில்லை. புதுமையை மட்டுமே மதிக்கும் ஒரு துறை எங்கள் கணினித் துறைதான்.

சத்யா நாதெள்ளா
தலைவர், மைக்ரோசாப்ட்



# விளையாட்டு செய்திகள்

## இங்கிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடர்: இந்திய அணியில் மூன்று அறிமுக வீரர்கள்!

இங்கிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க இந்தியக் கிரிக்கெட் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணியில், பிரசீத் கிருஸ்ணா, சூர்யகுமார் யாதவ் மற்றும் குர்ணல் பாண்ட்யா ஆகிய வீரர்கள், ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகம் பெறுகின்றனர். 18பேர் கொண்ட அணியில், சமீபத்தில் நடைபெற்று முடிந்த அவுஸ்ரேலியா அணிக்கெதிரான ஒருநாள் தொடரில், இடம்பெற்றிருந்த மணீஷ் பாண்டே, மாயங்க் அகர்வால், சஞ்சு சம்சன், ரவீந்திர ஜடேஜா, ஜஸ்பிரீத் பும்ரா மற்றும் முகமது ஷமி ஆகியோர் இடம்பெறவில்லை. சரி தற்போது அணியின் முழுமையான விபரத்தை பார்க்கலாம்,

விராட் கோஹ்லி தலைமையிலான அணியில், ரோஹித் சர்மா, ஷிகர் தவான், சுப்மான் கில், ஸ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், ஹார்திக் பாண்ட்யா, ரிஷாப் பந்த், கே.எல். ராகுல், யுஸ்வேந்திர சாஹல், குல்தீப் யாதவ், குர்ணல் பாண்ட்யா, வொஷிங்டன் சுந்தர், டி நடராஜன், புவனேஷ்வர் குமார், முகமது சிராஜ், பிரசீத் கிருஷ்ணா, ஷார்துல் தாக்கூர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடுவதற்காக இந்தியா வந்துள்ளது. இதில் முதலில் நடைபெற்ற நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் இந்தியக் கிரிக்கெட் அணி கைப்பற்றியது. தற்போது ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் தற்போதுவரை நடைபெற்று முடிந்துள்ள நான்கு போட்டிகளில் இரு அணிகளும் தலா 2 வெற்றிகளை பதிவுசெய்துள்ளன. அடுத்ததாக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் போட்டி, எதிர்வரும் 23ஆம் திகதி புனேயில் நடைபெறவுள்ளது.



## தென்னாபிரிக்காவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது இலங்கை ஜாம்பவான்கள் அணி!

வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரின், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், இலங்கை ஜாம்பவான்கள் அணி 8 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்துள்ளது. இந்த வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ள இலங்கை அணி, அன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில், இந்தியா அணியை எதிர்கொள்ளவுள்ளது. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ராய்பூர் மைதானத்தில் அன்று(வெள்ளிக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், இலங்கை ஜாம்பவான்கள் அணியும் தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணியும் மோதின.



இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை ஜாம்பவான்கள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, வென் வைக் 53 ஓட்டங்களையும் அல்விரோ பீட்டர்சன் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இலங்கை அணியின் பந்துவீச்சில், குலசேகர 5 விக்கெட்டுகளையும் ஜெய சூரிய, மஹரூப், வீர ரத்ன ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 126 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 17.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சிந்தக ஜெயசிங்க ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் உபுல் தரங்க ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், மகாயா நிட்னி மற்றும் அல்விரோ பீட்டர்சன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில், 5 விக்கெட்டுகளை சாய்த்த நுவான் குலசேகர தெரிவுசெய்யப்பட்டார்.

## ரி-20 உலகக்கிண்ண தொடரின் தகுதி சுற்று போட்டிகள் ஒத்திவைப்பு!

அவுஸ்ரேலியாவில் 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ண தொடருக்கான, தகுதி சுற்று போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது. கொவிட்-19 தொற்றின் மூன்றாம் அலை மற்றும் சில நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள கொவிட்-19 கட்டுப்பாடுகள் காரணமாக இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சி. விளக்கம் அளித்துள்ளது.



2022ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ண தொடருக்கான, ஆசியா ஏ மண்டலத்திற்கான தகுதி சுற்று ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை குவைத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இதில் பஹ்ரைன், குவைத், மாலைத்தீவு, கட்டார், சவுதி அரேபியா ஆகிய அணிகள் பங்கேற்க இருந்தன.

இந்த நாடுகளில் தற்போது கொவிட்-19 பாதிப்பு தீவிரமடைந்து வரும் நிலையில், தகுதி சுற்றுப் போட்டிகள், எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இதே போல் ஆபிரிக்க மண்டலத்திற்கான தகுதி சுற்று ஏ.பி என்று இரு வகையாக பிரிக்கப்பட்டு தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த போட்டிகளும் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 7ஆவது ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர், எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவது ரி-10 போட்டியிலும் வெற்றி: தொடரை வென்றது ஆப்கானிஸ்தான் அணி!

சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவது ரி-20 போட்டியில், ஆப்கானிஸ்தான் அணி 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2-0 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் அணி கைப்பற்றியுள்ளது. அபுதாபியில் அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 193 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கரீம் ஜெனட் 53 ஓட்டங்களையும் உஸ்மான் கானி 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில், முஸரபானி 2 விக்கெட்டுகளையும் நாகரவா, ட்ரிபானோ மற்றும் ரியான் பர்ல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 194 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிம்பாப்வே அணி, 17.1 ஓவர்கள் நிறைவில் 148 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் ஆப்கானிஸ்தான் அணி 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ரியான் பர்ல் 40 ஓட்டங்களையும் ட்ரிபானோ 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ரஷித் கான் 3 விக்கெட்டுகளையும் நவீன் உல் ஹக் மற்றும் மொஹமட் நபி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் அமீர் அம்ஸா, பரீட் மலிக் மற்றும் கரீம் ஜெனட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 40 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்திய மொஹமட் நபி தெரிவுசெய்யப்பட்டார். இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டி, இன்று அபுதாபியில் நடைபெறவுள்ளது.






## அட்லாண்டிக் பெருங்கடலில் சிக்கித் தவித்த 52 அகதிகள் பாதுகாப்பாக மீட்பு!

ஸ்பெயின் அருகே, அட்லாண்டிக் பெருங்கடலில் சிக்கித் தவித்த 52 அகதிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

ஆப்ரிக்காவில் இருந்து அகதிகளாக சென்ற 52 பேர் கிரான் கனரியா தீவுக்கு அருகே கடலில் சிக்கிக் கொண்டனர்.

இந்த நிலையில், கடும் குளிரில் தத்தளித்த அவர்களை கடலோர காவல்படையினர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

அவர்களில், மிகவும் கவலைக்கிடமாக இருந்த 2 வயது சிறுமிக்கு உடனடியாக சி.பி. ஆர் முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டதால் அவருக்கு உயிராபத்து ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது.

சிறுமியைப் போலவே உடல் வெப்பநிலை மிகவும் குறைவாக இருந்த கர்ப்பிணி தாயொருவரும் 6 சிறுவர்களும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.


© Borja Suarez/REUTERS

## ஜோர்ஜியாவில் துப்பாக்கி பிரயோகம் – 8 பேர் உயிரிழப்பு!

ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் அமைந்துள்ள மூன்று மசாஜ் நிலையங்களில் அன்று (செவ்வாய்கிழமை) மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஆறு ஆசிய பெண்களும் அடங்குவதாக தெரிவித்த பொலிஸார், துப்பாக்கி சூட்டினை மேற்கொண்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அட்லாண்டாவின் வடக்கே செரோகி கவுண்டியில் உள்ள யங்ஸ் ஆசிய மசாஜ் நிலையத்தில் மாலை 5 மணியளவில் ஒரு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் நான்கு பேர் உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து அட்லாண்டாவில் அமைந்துள்ள மேலும் இரு மசாஜ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டார் என்ற சந்தேகத்தில் 21 வயதுடைய ரொபர்ட் ஆரோன் லாங் என்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## தன்ஸானிய ஜனாதிபதி உயிரிழப்பு

கிழக்கு ஆபிரிக்க நாடான தன்ஸானியாவின் (Tanzania) ஜனாதிபதி ஜோன் மகுபுலி (John Magufuli) தனது 61 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

இதய செயலிழப்பே அவரது மரணத்திற்கான காரணம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நாட்டின் உப ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



வீரம் பொருந்திய தலைவரை தன்ஸ ானியா இழந்திருப்பதாகத் தெரிவித்துள்ள அந்நாட்டின் உப ஜனாதிபதி Hassan, 14 நாட்கள் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் எனவும் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

மறைந்த ஜனாதிபதி John Magufuli கடந்த மாதம் 27 ஆம் திகதி மக்கள் மத்தியில் இறுதியாக தோன்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருந்ததாக வதந்திகள் பரவி வருகின்ற நிலையில், அவை இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என கூறப்படுகின்றது.

## பிரிட்டிஷ் விமானங்களுக்கு விதிக்கப்பட்ட தடை ஏப்ரல் 16 வரை நீடிப்பு!

பிரிட்டிஷ் விமானச் சேவைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை, ரஷ்யா நீடித்துள்ளது. பிரித்தானியாவில் கண்டுபிடிக்கப்பட்டு ரஷ்யாவிலும் பரவியுள்ள புதுவகை கொரோனா தொற்றே இதற்கு பிரதான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஏப்ரல் 16 நள்ளிரவு வரை, தடை நீடிக்கப்படுவதாக ரஷ்யாவின் கொரோனா கிருமித்தொற்றுக்கு எதிரான பணிக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் 22ஆம் திகதி முதல் இவ்வாறு குறித்த தடை நீடிக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை, எளிதில் பரவக்கூடிய புதுவகை கொரோனாவினால் ரஷ்யாவில், 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## அமெரிக்காவுடனான உறவு மோசம் அடைவதற்கான பொறுப்பு அந்நாட்டிடமே உள்ளது: ரஷ்யா!

ரஷ்ய - அமெரிக்க உறவுகள் மேலும் மோசம் அடைவதற்கான பொறுப்பு அமெரிக்காவிடம் தான் முழுமையாக உள்ளது என ரஷ்ய துணை வெளியுறவு அமைச்சர் செர்ஜி ரியாப்கோவ் தெரிவித்துள்ளார். சிறையில் அடைக்கப்பட்டுள்ள அலெக்சி நவால்னியை விடுவிக்க வேண்டும் மற்றும் அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பான விவகாரங்களில் இருநாடுகளுக்கும் இடையே உறவில் விரிசல் விழுந்துள்ளது.

அத்துடன் தேர்தல் தலையீடு விவகாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் அதற்கான விலையை கொடுப்பார் எனவும் அவர் ஒரு கொலையாளி எனவும் அமெரிக்க ஜனாதிபதி பைடன் விமர்சனம் செய்திருந்தார். இந்த பின்னணியில் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

இதனிடையே வொஷிங்டனில் உள்ள அமெரிக்காவுக்கான ரஷ்ய தூதர் அனடோலி அன்டோனோவ்வை நாடு திரும்ப ரஷ்யா உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்துரஷ்யவெளியுறவுஅமைச்சகம்வெளியிட்டுள்ளஅறிக்கையில்,'அமெரிக்காவுடனான உறவுகளின் பின்னணியில் என்ன செய்ய வேண்டும் என்பதை பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துடன் ஆலோசனை நடத்துவதற்காக ரஷ்ய தூதர் மாஸ்கோவுக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## குழந்தைகள், சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி பரிசோதனைகளைத் தொடங்கியது மொடேர்னா!

கொரோனா தடுப்பூசி சிறுவர்களுக்கு பாதுகாப்பானதா மற்றும் பயனுள்ளதா என்பதைத் ஆராயும் சோதனைகளை ஆரம்பித்துள்ளதாக மொடேர்னா இன்க் நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்படி, ஆறு மாதம் முதல் 11 வயதுக்கு உட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட குழந்தைகளுக்கு இவ்வாறு தடுப்பூசி வழங்கத் தொடங்கியுள்ளதாக அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



இந்தச் சோதனையில் அமெரிக்காவிலும் கனடாவிலும் சுமார் ஆறாயிரத்து 750 தன்னார்வலர்கள் இணைக்கப்படவுள்ளனர். இதற்கு அமெரிக்காவின் தேசிய ஒவ்வாமை, தொற்று நோய்கள் மற்றும் பயோமெடிக்கல் மேம்பாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆணையகம் தம்முடன் ஒத்துழைப்பை வழங்குவதாக மொடர்னா நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசோதனையின் முதல் கட்டத்தில், ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு அளவுகளில் தடுப்பூசிகளைப் பரிசோதிக்கவுள்ளார்கள். இதன்படி, இரண்டு முதல் 11 வயதிற்குட்பட்ட ஆய்வில் பங்கேற்கும் சிறுவர்கள் ஒருதடவை தடுப்பூசிக்கு 50 அல்லது 100 மைக்ரோகிராம் அளவினைப் பெறுவார்கள். அதேநேரத்தில், ஆறு மாதங்கள் முதல் 24 மாதங்களுக்குள் உள்ள குழந்தைகள் ஒருதடவை தடுப்பூசிக்கு 25 அல்லது 50 அல்லது 100 மைக்ரோகிராம் அளவினைப் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அனைத்து அளவுகளும் இரண்டு நாட்கள் முதல் 28 நாட்கள் இடைவெளியில் நிர்வகிக்கப்படும்.

இதேவேளை, ஆய்வின் இரண்டாம் கட்டத்தில் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு எந்த அளவுகளை வழங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க சோதனையின் முதற்கட்டத்திலிருந்து தரவை ஆய்வாளர்கள் ஆய்வு செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது, இளம் வயதினரிடையே கொரோனா தடுப்பூசியின் சாத்தியமான பாதுகாப்பு மற்றும் நோயெதிர்ப்புத் திறனை மதிப்பிடுவதற்கு உதவும் என மொடேர்னா தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டீபன் பான்செல் தெரிவித்துள்ளார்.

# தனக்கு 105 குழந்தைகள் வேண்டும் என கூறும் பெண்

ஜோர்ஜியா நாட்டில் கோடீஸ்வர கணவருடன் வசிக்கும் பெண்ணுக்கு தற்போது வரை 11 குழந்தைகள் உள்ள நிலையில் 105 குழந்தைகள் தனக்கு வேண்டும் என கூறியுள்ளார்.



ரஷ்யாவை சேர்ந்தவர் கிறிஸ்டினா ஓஸ்ட்ருக். இவரின் கோடீஸ்வர கணவர் கலிப். தம்பதிகள் ஜோர்ஜியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது வரை இவர்களுக்கு 11 குழந்தைகள் உள்ளனர். இதில் கிறிஸ்டினா 1 குழந்தையை மட்டுமே இயற்கையாக பெற்றெடுத்தார். மற்ற 10 குழந்தைகளும் வாடகை தாய் மூலம் பெற்றெடுக்கப்பட்டது. கிறிஸ்டினா கூறுகையில், எனக்கு குழந்தைகள் என்றால் மிகவும் பிடிக்கும், 105 குழந்தைகளை பெற நான் விரும்புகிறேன்.

தற்போது வரை 1 குழந்தை மட்டுமே நான் இயற்கையாக பெற்றெடுத்தேன். மீதமுள்ள குழந்தைகள் என் கணவரிடமிருந்தும் என்னிடமிருந்தும் மரபணு ரீதியாக வாடகைதாய் மூலம் பெற்றெடுக்கப்பட்டதாகும். இறுதியாக எனக்கு எத்தனை குழந்தைகள் இருக்கும் என தெரியவில்லை. ஆனால் அத்துடன் நிறுத்துவதற்கு மட்டும் திட்டமில்லை.

வாடகைத்தாய் மூலம் பெற்ற 10 குழந்தைகளில் ஒவ்வொருவருக்கும் 8,000 யூரோக்கள் செலவானத என கூறியுள்ளார்.

# 29 வயது இளம்பெண் ஒருவர் 80 வயது முதியவரைக் காதலித்து திருமணம்


29 வயது இளம்பெண் ஒருவர் 80 வயது முதியவரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருவது பலருக்கும் ஆச்சரியத்தை அளித்துள்ளது. காதலுக்குக் கண்ணில்லை, காதல் எந்த வயதிலும் வரலாம் என்ற கூற்றை எல்லாம் மெய்ப்பிக்கும் வகையில் நடந்துள்ளது இந்த சம்பவம். தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகரைச் சேர்ந்த 29 வயது இளம்பெண் வுநசணநட சுயளஅரள. சட்டம் படித்து வரும் மாணவியான இவர், தன்னை விட 51 வயது மூத்தவரான 80 வயது மதிக்கத்தக்க 'வில்சன்' என்பவரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளார்.

நாங்கள் இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருவதாகக் கூறியுள்ள அவர் தங்களுக்குள் எப்படி காதல் வந்தது என்பது குறித்து தற்போது விவரித்துள்ளார். கடந்த 2016ம் ஆண்டு வில்சனை நிகழ்ச்சி ஒன்றில் பார்த்ததாக Terzel கூறியுள்ளார். அவர் தான் என்னை முதலில் பார்த்தார். உடனே எனது அருகில் வந்து இங்கு எனது பக்கத்தில் அமரலாமா எனக் கேட்டார். அவரை அப்போது தான் நான் முதல் முதலாகப் பார்த்தேன். அந்த நிமிடமே எங்களுக்குள் ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டது. பின்னர் வெகு நேரம் இருவரும் பேசிக் கொண்டு இருந்தோம். பிரிவதற்கு மனசே இல்லாமல் இருவரும் அங்கிருந்து சென்றோம். பின்னர் இருவரும் சந்தித்துக் கொள்ள முடிவு செய்து எங்களின் மொபைல் எண்களை பரிமாறிக்கொண்டோம். ஒரு நாள் டேட்டிங் செல்ல முடிவு செய்து இருவரும் வெளியில் சென்றோம். அப்போது இருவருக்குள்ளும் நல்ல ஒரு புரிதல் இருப்பது எங்களுக்குப் புரிந்தது.

இதையடுத்து ஒரு வருடம் கழித்து இருவரும் திருமணம் செய்து கொண்டோம் என Terzel தெரிவித்துள்ளார். இருவரின் திருமணத்திற்கு Terzelயின் பெற்றோர் சம்மதம் தெரிவித்த நிலையில், வில்சனும் தனது 51 வயது மகளைச் சாட்சியாக வைத்து Terzelia திருமணம் செய்து கொண்டார். இருவரும் வெளியில் சென்றால் தந்தை, மகள் எனப் பலர் கூறுகின்றனர். ஆனால் அது குறித்து எங்களுக்குக் கவலை இல்லை. வில்சனை பார்த்ததும், அவர் என்னை வாழ்நாள் முழுவதும் நன்றாகக் கவனித்துக் கொள்வார் எனத் தோன்றியது. அந்த ஒரு கணத்தில் இவர் தான் என்னுடைய வருங்கால கணவர் என்பதை முடிவு செய்து விட்டேன் என Terzel கூறியுள்ளார்.

இதனிடையே இந்த செய்தி இணையத்தில் வைரலான நிலையில், முதியவர் மீது காதல் வர Terzel தெரிவித்துள்ள கருத்தைப் பார்த்த நெட்டிசன்கள் பலரும் தங்களின் இதயம் நொறுங்கி விட்டதாகப் பதிவிட்டுள்ளார்கள்.




இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 21.03.2021 அன்று வெளியிடப்பட்டது.